Registered as a News paper in Sri Lanka    பக்கங்கள்: 06    விலை ரூபா 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி

நாதம் 01    பிரமோதூத ஹூ சித்திரை ௴ 23 ஆம் வ    ஞாயிற்றுகிழமை    (06 - 05 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா ୨    ஓசை 77

## ஆகக் குறைந்த சம்பளம் ரூபா 1000

(கொழும்பு)

சம்பள நிர்ணய சபை புதிய சம்பளத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் பிரகாரம் ஆகக் குறைந்த சம்பளம் மாதம் ரூபா ஆயிரத்துக்குக் குறைவாக இருக்கக் கூடாதாம். சம்பள நிர்ணய திட்டத்துக்குக் கீழ் வராத தொழில் செய்பவர்களும் ஒப்பந்த அடிப்படையில் வேலை பெறுபவர்களும் இத் திட்டத்தினால் பயனடையமாட்டார்கள்.

உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கும் விரைவில் சம்பள உயர்வு கிடைக்க இருக்கிறது.

வாழ்க்கைச் செலவு மாற்றங்களுக்கு அமைய சம்பளத்தோடு, வாழ்க்கைச் செலவுப்படியைப் பெறுபவர் ரூபா 1000 சம்பளத் திட்டத்துக்குக் கீழ் வரமாட்டார்கள்.

# விடுதலைப் புலிகள் மீது வீண் பழி சுமத்தாதீர்!

## தமிழ்நாடு சட்டசபையில் எதிர்க்கட்சிக்கு கலைஞர் பதில்

### 'இன்று செல்வாக்குடனிருப்பது புலிகளே'

(சென்னை)

விடுதலைப் புலிகள்மீது வீண்பழி சுமத்தவேண்டாமென்றும் தமிழீழத்தில் இன்று விடுதலைப் புலிகள்தான் செல்வாக்குடன் இருக்கிறார்கள் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று சட்டசபையில் எதிர்க்கட்சிகளுக்குத் தெரிவித்தார்.

இந்திராகாங்கிரஸ் துணைத் தலைவர் குமரி ஆனந்தன் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே முதல்வர் கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

தமிழ்நாட்டில் கைது செய்யப்படும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களில் விடுதலைப்

கடந்த சில தினங்களாக தமிழ்நாடு சட்டசபையில் விடுதலைப் புலிகள் சம்பந்தமாக குமரி ஆனந்தனுக்கும் திராவிடமுன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குமிடையே வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுவதும் முதல்வர் கலைஞர் கருணாநிதி தலையிட்டு விடு

வழக்கமாக இருந்துவருகிறது,

தமிழ் நாட்டில் உள்ள மீனவர்கள் இலங்கைக்குச் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்து பேசியிருப்பதாக வெளியான பத்திரிகைச் செய்திகள் குறித்து



திரு. குமரிஆனந்தன் கேள்விகளைக் கேட்டார்.

தமிழக மீனவர்கள் மத்திய அரசின் உரிய அனுமதிபெறாமல் இலங்கைக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச முடியாதென்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

## பன்றி இறைச்சியால் மூளைக்காய்ச்சல் நோய்

(கொழும்பு)

பன்றி இறைச்சியால் நாட்டில் மூளைக்காய்ச்சல் நோய் பரவுகிறதுஎன சுகாதாரஅமைச்சு தெரிவித்துள்ளது.

திவுலப்பிடிய பகுதியில் இந்நோய் காரணமாக நால்வர் மரணமானதையடுத்தே அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது.

குறிப்பாக பண்ணைகளில் சுகாதார முறைப்படி வளர்க்கப்படாத பன்றிகள் மூலமாகவே இது பரவுகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனால் பன்றிகளுக்குத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளையும் சுகாதார அமைச்சு

(6ஆம் பக்கம் பார்க்க)

## உயர் அதிகாரி நிர்ப்பந்தத்தால் தலைமறைவானேன்

(வவுனியா)

தலைமறைவாகிவிட்டார் என்று கூறப்பட்டுவந்த வவுனியா பிரதம தபாலகத்தைச் சேர்ந்த சிற்றூழியர் திரும்பி வந்துள்ளார்.

அவரிடம் தலைமறைவான செய்திபற்றிக் கேட்டபோது, தான் விருப்பப்பட்டு தலைமறைவாகவில்லை என்றும், வவுனியா பிரதம தபாலகத்தைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவரினால் தலைமறைவாகும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

அண்மையில் வெளிநாட்டுத் தபால்கள் பிரிக்கப்பட்ட நிலையில் கிணற்றுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட சம்பவத்தைப்பற்றி அவரிடம் கேட்டபோது, இதோடு சம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கனிஷ்ட வித்தியாலயத்தில் வகுப்புக்கள் மரங்களின் கீழ்

(வவுனியா)

மாதர்பணிக்க மகிழங்குளம் கிராமத்தில் உள்ள கனிஷ்ட வித்தியாலயத்தில் நான்கு வகுப்புகள் மரங்களின் கீழ் தான் நடைபெறுகின்றன என்று அக்கிராம மக்கள்புகார் தெரிவித்துள்ளனர்.

சுமார் இருநூற்றி நாற்பது மாணவர்களைக்கொண்ட இப் பாடசாலையில் க. பொ. த. சாதாரண தரம் வரை படங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இரு கட்டடங்களும், ஓலையால் அமைக்கப்பட்ட நிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிருமி நாசினி அருந்தி தற்கொலை

(வவுனியா)

வவுனியா கோவில் புதுக்குளத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர்ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

நீ. நீலகண்டன் (வயது 70) என்ற தச்சுவேலை செய்து வந்தவரே தற்கொலை செய்து கொண்டவராவர்.

கடந்த வெள்ளிக்கிழமை (04-05-90) காலை கிருமி நாசினி அருந்திய இவரை வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டபோது அவர் உயிர் பிரிந்தது. தற்போது பிரேத பரிசோதனைக்காக இவரது சடலம் வவுனியா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

## சண்டே ரையிம்ஸ் ஆசிரியர் ராஜினாமா

(கொழும்பு)

கொழும்பிலிருந்து வெளிவரும் சண்டே ரையிம்ஸ் பத்திரிகையின் ஆசிரியரான விஜிதா யாப்பா அப் பத்திரிகையின் ஆசிரியர் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளார். இவர் ஐலண்ட் பத்திரிகையின் முதலாவது ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி

தீவுப்பகுதி

தெரிவித்துள்ளனர்.

(6ஆம் பக்கம் பார்க்க)

யப்படும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களில் விடுதலைப் புலிகள் எவருமில்லை என்றும் முதல்வர் கருணாநிதி சொன்னார்.

வதும் முதல்வர் கலைஞர் கருணாநிதி தலையிட்டு விடுதலைப் புலிகள் பற்றி பதில் சொல்லி குமரி ஆனந்தனின் வாயை மூடச் செய்வதும்

தீவுப்பகுதி

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வேலணையைச் சேர்ந்த செல்வன் கனகரெத்தினம் காண்டீபன், செல்வி சுந்தரலிங்கம் அன்புக்கரசி ஆகிய இருவருக்கும் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் மாதாந்த ஊக்குவிப்புத்தொகையை வழங்குவதென்று தீர்மானித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இரணைமடுக் குளம் பெரிப்பிக்க உலக வங்கி உதவி

(கிளிநொச்சி)

இலங்கையிலுள்ள மிகப் பெரிய குளங்களில் ஒன்றான கிளிநொச்சி இரணைமடுக் குளம் உலக வங்கியின் உதவியுடன் பெரிட்பிக்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார்.

குளத்து வானை (ஸ்பில்) ஒரு அடி உயர்த்துவதற்கு உலக வங்கி சம்மதம் தெரிவித்துள்ளது. ஒரு அடி உயர்த்துவதன் மூலம் ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலங்

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஊனமுற்றோருக்கு சுயதொழில் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

எமது சமூகத்தில் ஊனமுற்ற சமுதாயத்தை சேர்ந்தவர்களை முன்னுக்கு கொண்டு வரும் முகமாக யாழ். ஊனமுற்றோர் சங்கத்தினால் புதிய வழி காட்டல் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகிறது.

ஊனமுற்ரோருக்சான புதிய பல சுய வேலை வாய்ப்பு திட்டங்சள் யாழ்ப்பாணம் ஊணமுற்ரோர் சங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் உள்ள ஊணமுற்ற அணைத்து அங்கத்தவர்களும் இச்சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்.

இவர்களின் பயிற்சிக்கென இரும்புக்கதிரை செய்தல்,

(6ஆம் பக்சம் பார்க்க)

# சிறுவர் மனோதத்துவ நிபுணர் யாழ். வருகை

(யாழ்பாணம்)

நோர்வேயிலுள்ள பிரபல சிறுவர் மனோவைத்திய நிபுணரான டாக்டர் எலிசபெத் ஜறாக் மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நோர்வேயிலுள்ள சிறுவர் பாதுகாப்பு (றெட்பாணா) நிறுவனத்தில் உளவியல் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் இவர் அளப்பரிய சேவைகள் புரிகிறார்.

யுத்தம் நடைபெற்ற ஆபிரிக்கா மற்றும் நாடுகளுக்கு விஜயம் செய்து தற்போது இலங்கைக்கும் வந்துள்ளார்.

றெட்பாணாவின் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

# இன்றைய நிகழ்வுகளை ஓவியங்கள் எதிர்கால சந்ததிக்கு காட்டுகின்றன

(யாழ்ப்பாணம்)

எம்மினத்தின் வரலாற்றை நாளைய சந்ததிக்கு எடுத்துக் கூறுவது ஓவியங்களேயாகும். ஆகவே எமதுஓவியக்கலையை வளர்ப்பது மிக அவசியமானதாகும்.

என நேற்று யாழ். மத்திய கல்லூரில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் உரையாற்றும்போது யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் டொமினிக் அவர்கள் குறிப்பிட்டார்.

இக்கண்காட்சிக்கு ஏராள மானமாணவர்களும் மக்களும் பங்குபற்றி சிறப்பித்தனர்.

வியர் திரு. மார்க் அவர்களும் இவ்வைபவத்திற்கு சிறப்பு விருந்தினராக பங்குபற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும்டொமினிக்அவர்கள் பேசும்பொழுது இன்று நடைபெறும் இந்த ஓவியக் கண்காட்சியைப் பார்க்கும்போது அனேகமான ஓவியங்கள் கடந்த காலத்தில்நடைபெற்ற இராணுவ அட்டூழியங்களை பிரதிபலிப்பனவாகவே உள்ளது கவனிக்ககூடியதாக உள்ளது.

(6-ஆம் பக்சம் பார்க்க)

# மட்டக்களப்பு கச்சேரியில் 32,000ரூபாகாசோலைமோசடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செயலக புனர்வாழ்வு பிரிவில் மீள ஒப்படைக்கப்பட்ட ரூபா 32,000 பெறுமதியான எட்டு காசோலைகள் ரொக்கமாக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டது.

சில மாதம் முன்பு மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்ற ரூபா 4000 கொடுப்பனவு

(6ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரி முழங்காவில் பகுதிக்கு மின் விநியோகத் திட்டம்

(கிளிநொச்சி)

இருளில் மூழ்கியுள்ள பூநகரி உதவி அரசாங்க பிரிவுக்குட்பட்ட முழங்காவில், பூநகரி ஆகிய இடங்களுக்கு மின் இணைப்புச் செய்ய சுமார் 25 லட்சம் ரூபா வரை தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான பணத்தைப் பெறுவதற்காக கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் உதவி வழங்கும் வெளிநாட்டு ஸ்தாபனம் ஒன்றிடமும், தமிழ் பாரளுமன்ற உறுப்பினர் ஒருவரிடமும் உதவி கேட்டுள்ளார்.

இரண்டு இடங்களில் ஒன்றிலிருந்தாவது பணம் கிடைக்குமென அரசாங்க அதிபர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தப் பணம் கிடைத்தால் இப் பகுதிக்கான மின் விநியோக வேலைகளை ஆரம்பிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(49)

# ஹெலிகப்டரை காணவில்லை தேடபுலிகளிடம் வேண்டுகோள்

(கல்லடி)

நேற்று பிற்பகல் கல்லடி இராணுவ முகாமில் இருந்து மின்னேரியா நோக்கிப் புறப்பட்ட இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகப்டர் ஒன்று காணாமல் போயுள்ளது.

நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் மழையும் காற்றினாலுமே இக் ஹெலிகப்டர் காணாமல் போயிருக்கலாம் எனத் தெரிகின்றது.

இக் ஹெலிகப்டர் மட்டக்களப்பு மாவட்டத்தில் சென்றாவது வீழ்ந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெசாக்கை முன்னிட்டு இறைச்சிக்கடைகள் பூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு இம் மாதம் 7 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரையும் நாட்டிலுள்ள சகல இறைச்சித் கடைகளும் மூடப்பட வேண்டும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நாட்களில் எந்த ஒரு மிருகமும் இறைச்சிக்காக வெட்டப்படக் கூடாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல இம் மாதம் 9 ஆம் திகதி, 10 ஆம் திகதி, 11 ஆம் திகதிகளில் நாட்டிலுள்ள சகல மதுபானக் கடைகள், பார்கள் என்பனவும் மூடப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 50 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக வடகிழக்கு மாகாணசபை கிளிநொச்சி கச்சேரிக்கு 50 லட்சம் ரூபாவை அனுப்பி வைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓர் இரு வாரங்களுக்குள் இப்பணம் பகிர்ந்தளிக்கப்படும் என கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க: மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 27 ஆயிரம் "குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இப்புள்ளி விபரத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத பலர் இப்போதும் வந்து தமக்கு நஷ்டஈடு தரும்படி கோருகிறார்கள்.

இந்த நிலையில் உண்மையாகப் பாதிக்கப்பட்ட இருபத்திரண்டு ஆயிரம் பேருக்கு மட்டும் தான் நிவாரணம் வழங்கும்படி அரசாங்கம் எமக்குப் பணித்துள்ளது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# நூற்றைம்பது கைதிகளுக்கு வெசாக் அன்று விடுதலை

(கொழும்பு)

எதிர்வரும் வெசாக் தினத்தை முன்னிட்டு நூற்றியம்பது சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்.

நீதியமைச்சர் ஜனாப். ஏ. சி. எஸ். ஹமீட் விடுத்த சிபார்சுகளையடுத்து அபராதத்தொகை செலுத்தத்தவறிய சிறையில் உள்ளவர்களுக்கேஇந்த மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு ஆயுள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வறுமையை ஒழிக்க உதவும்படி நெதர்லாந்திடம் கோரிக்கை

(கொழும்பு)

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும், வறுமையை ஒழிக்கவும் உதவி செய்யுமாறு நெதர்லாந்துஅரசிடம் கொள்கைத் திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் கலாநிதி விமல் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து ஒருங்கிணைப்பு கிராமிய அபிவிருத்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

# முற்றத்தில் சிறுவனைப் பாம்புகடித்தது

(யாழ்ப்பாணம்)

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவனைப் பாம்பு கடித்தது.

ஊர்காவற்றுறை பருத்தி அடைப்பு என்ற இடத்தில் மேற்படி சம்பவம் இடம் பெற்றது. கேசயன்குணசேகர் என்ற ஒன்பது வயதுச் சிறுவனையே பாம்பினால் கடியுண்டவனாவான். இப்பாலகனின் பெற்றோர் பாம்புடன் யாழ் வைத்தியசாலைக்கு வந்திருந்தனர்.



மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் வைக்கப்பட்ட ஓர் ஓவியத்தை மக்கள் பார்வையிடுகின்றனர்.

## வரிவிளம்பரம்

**FOR SALE**

Alsation pups Seven (7) weeks old wormed and weaned. Doberman Pincher X Ridge Back 6 month — Bantam Chicks 2, 1/2 mounths for Sale 249, Palaly Road, Kantharmadam, Jaffna.

(R.450)

## விற்பனைக்கு

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விடன், யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் — ஆங்கிலம்க FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

(B.825)


## தமிழ்க் கிராமங்களின் பெயர் மாற்றம்

(வந்தாறுமூலை)

கிழக்கு மாகாணத்தை சேர்ந்த மன்னம் பிட்டி பகுதியில் உள்ள சில கிராமங்கள் அதன் பாரம்பரியமான பெயர்களை இழந்துள்ளன.

மதுறுஓயா அபிவிருத்தி திட்டப் பகுதியில் உள்ள முத்துக்கல் என்னும் தமிழ் கிராமம் முத்துக்கல எனவும் தீவுச்சேனை என்னும் கிராமம் நவசேனபுர எனவும் மதுரம்குளம் என்னும் கிராமம் மதுரங்கல எனவும் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

மகாவலி அபிவிருத்தி என்னும் போர்வையில் இப்பெயர் மாற்றம் நடந்துள்ளது என்று அப்பகுதி வாழ் தமிழ் மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

(29)

## கைத்தறி உற்பத்தியாளரிடம் விபரம் சேகரிக்கப்படுகிறது

(காத்தான்குடி)

காத்தான்குடிப் பிரதேச கைத்தறி உரிமையாளர்கள் சங்கம் அதன் அங்கத்தவர்களான கைத்தறி உற்பத்தியாளர்களிடமிருந்து தொழில் துறை தொடர்பான விபரங்களை சேகரித்து வருகின்றது.

மேற்படி சங்கத்தின் செயலாளர் ஜனாப் கே. எம். எம். சித்தீக் இத் தகவலைத் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் கைத்தறித் துறையை விஸ்தரிக்கும் நோக்குடன் புடவைக்கைத்தொழில் திணைக்கள அத்தியட்சகர் கைத்தறி உற்பத்தியாளர்களிடம் இருந்து பத்திரிகை அறிவித்தல் மூலம் விபரங்களைக் கோரியிருந்தார்.

இவ் வேண்டுகோளுக்கமைய இப் பிரதேச கைத்தறி உற்பத்தியாளர்களை ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பின் கீழ் ஒன்றுபடுத்தி கேட்கப்பட்டிருந்த விவரங்களை திரட்டும் பணியில் சங்கம் தற்போது செயலாற்றி வருவதாசவும் அவர் மேலும் சொன்னார்.

இதுவரை 30க்கும் அதிகமான உற்பத்தியாளர்கள் எமது நிர்வாக ஒழுங்கமைப்பில் நம்பிக்கையும், திருப்தியும் கொண்டு அங்கத்துவம் பெற்றிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய தினம் புடவைக் கைத்தொழில் திணைக்கள அத்தியட்சகரிடம் இவ்வாறு சேகரிக்கப்படும் விபரங்களை தனித் தனியாகவும், ஒருங்கிணைந்தும் நேரில் கையளிக்கவும் தாம் நடவடிக்கை எடுத்ததாக ஜனாப் சித்தீக் கூறினார்.

சூறாவளியினால் கிழக்கு மாகாணத்தில் கைத்தறித் துறை வெகுவாகப் பாதிக்கப்பட்ட பின்னர் ஆரோக்கியமான புனருத்தாரண நடவடிக்கை இப்போதுதான் மேற்கொள்ளப்படுவதாகவும், அதற்காக எமது சங்கம் அத்தியட்சகருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

(55)


## பிளவுஸ் ஹோட்டல்

100, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

பழைய நிர்வாகிகளால் உங்கள் நற்சேவையில்

**40 வருட சேவை**

கோழி புரியாணி,

ஆட்டு புரியாணி,

மாட்டு புரியாணி,

மரக்கறி புரியாணி

அத்துடன் விஷேசமான ஓடர் கவனிக்கப்படும்.

நற்சேவை சிறப்புற பேராதரவு நல்கும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

(B/623)


## கடந்த வருடம் நடந்த விவே. பரீட்சை முடிவுகள்

கடந்த 05-02-1989ல் கொழும்பு விவேகானந்த சபை நடத்திய அகில இலங்கைச் சைவசமயபாடப் பரீட்சையில் பரிசில்கள் பெறுவோரின் விபரங்கள் வருமாறு;

**11ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு- செல்வன் தி. சயந்தன், யாழ். இந்துக்கல்லூரி
2ஆம் பரிசு செல்வி செ. ஜெயந்தி, யா/சுதுமலை சிம்மப்பாரதி வித்தியாசாலை
3ஆம் பரிசு செல்வி பா. அனுலஷ்ஷி, பெரியகல்லாறு மகாவித்தியாலயம் மட்டக்களப்பு

**10ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு செல்வி அ. சுந்தரவதனி, யாழ்/வடஇந்து மகளிர் கல்லூரி
2ம் பரிசு செல்வி. சி. சிவரதி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி
3ஆம் பரிசு செல்வி பா. அனுஷா, வட இந்து மகளிர் கல்லூரி

**9ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு செல்வி அ. லோஜினி, திருகோணமலை புனித மரியாள் கல்லூரி
2ம் பரிசு செல்வன் பொ. விசாகன், யாழ். இந்துக்கலூரி
3ஆம் பரிசு செல்வி ப. நிரஞ்சனி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

**8ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு செல்வி க. சுஜிதா, முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி
2ம் பரிசு செல்வி ஞா. வசிந்தரா, புசல்லாவ சரஸ்வதி மகாவித்தியாலயம்
3ஆம் பரிசு செல்வி தி. மதிவதனி, சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம்

**7ஆம் ஆண்டு**
1ம் பரிசு செல்வி ச. வைதேகி, திருக்குடும்பக் கன்னியர் மடம் பம்பலப்பிட்டி
2ஆம் பரிசு வெ. செல்வி ஜெயகலா, கோட்டைக்கல்லாறு மகாவித்தியாலயம் மட்டக்களப்பு
3ஆம்பரிசு செல்வி த. தர்மினி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி பம்பலப்பிட்டி

**6ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு செல்வன் ந இராஜகணேஷ் இந்துக்கல்லூரி பம்பலப்பிட்டி
2ஆம் பரிசு செல்வி செ. தமிழீழச்செல்வி திருகோணமலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்
3ஆம் பரிசு செல்வன் இ. இளங்கோவன் கிளிநொச்சி மத்தியமாகாவித்தியாலயம்

**5ஆம் ஆண்டு**
1ஆம்பரிசு ச. செல்விராதிகா, காரைதீவு சண்முக வித்தியாலயம்
2ஆம் பரிசு செல்வன் சி ஜதீஸ்குமார், இந்துக் கல்லூரி பம்பலப்பிட்டி
3ஆம் பரிசு செல்வி. தி. பூர்ணிமா, சைவ மங்கையர் வித்தியாலயம் வெள்ளவத்தை

**4ஆம் ஆண்டு**
1ஆம் பரிசு செல்வி செ. மாலதி, சுந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை
2ஆம் பரிசு செல்வி ஸ்ரீ. கதிர்காமவள்ளி, வட இந்துமகளிர் கல்லூரி
3ஆம் பரிசு செல்வி ந. நளாயினி, மயிலனி சைவ மகாவித்தியாலயம்

**3ஆம் ஆண்டு**
ஆம்பரிசு செல்வி ந. பவானி, சுழிபுரம் ஐக்கியசங்க வித்தியாசாலை
2ஆம் பரிசு செல்வி மே. சுனீத்திரா, சுத்தான் இராம கிருஷ்ணமிசன் த. க. பாடசாலை மட்டக்களப்பு
3ஆம்பரிசு செல்வி த. ஜானகி, நீர்கொழும்பு விஜயரத்தினம் மகாவித்தியாலயம்

## நோயாளர் மீது சினம்

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் உள்ள சில ஊழியர்கள் இங்கு வரும் நோயாளிகளுடன் கடுமையாகவும் வேண்டா வெறுப்பாகவும் நடந்து கொள்வதாக நோயாளிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

(25)


## யாழ்நகரில் இன்றைய சினிமா

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.45, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30, 6:30 10:30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
**கண்ணன் வருவான்**
(புதிய பிரதி)

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
150ஆவது நாளைநோக்கி வெற்றிநடை போடுகிறது
தினசரி 4.00 6.45 9 50
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10.30 2 30 6.30 10.30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)
திங்கள் முதல்
மூன்றுமுடிச்சு

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.45
சனி. ஞாயிறு
10-30, 2-30. 4-45, 700 & 945
DAVID WARBECK IN
**THE HUNTERS OF THE GOLDEN COBRA**

**வெலிங்டன் யாழ்**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
**நிலவே மலரே**
(புதிய பிரதி)
B/859

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45,
சனி ஞாயிறு காலை10-30 2-30 6-30
கமல், ரஜனி, ஸ்ரீதேவி நடித்த
**16 வயதிலே**
(புதிய பிரதி)
(B/860)

**ஹரன் - யாழ்**
தினசரி 4·00, 6·45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2·30, 6·30, 9·30
கமலஹாசன் - சரண்யா நடித்த
**"நாயகன்"**
75 நாட்களுக்குமேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
(கடைசி வாரம்)
B 887


## தவறவிட்ட அடையாள அட்டை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி டஸ் நிலையத்தில் அமைந்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் குரல் ஒலிபரப்புச் சேவையில் தவற விட்டவர்களின் அடையாள அட்டைகள் பெரும் தொகையாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தமது அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (49

(29) (B/623) விக்கினேஸ்வரா மகாவித்தியா றனர். (25) தொகையாக ஒப்படைக்கப் கோள் விடுத்துள்ளனர். (49


வாரீர் வந்து பாரீர் 7 வருட கால இடைவெளியின் பின்னர் மீண்டும்

# வல்வையில் இந்திர விழா

## 9.5.1990 (புதன்கிழமை)

வல்வை முத்துமாரி அம்பாள் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு வல்வை நெடியகாட்டு பிள்ளையார்கோவில் மோர்மட வரவேற்புவிழா காலை 8 மணியளவில் அம்பாள் நெடியகாட்டுபிள்ளையார் கோவிலை வந்து சேரும்போது **100** அடி உயரமான இராட்சத புகைக்குண்டுகள் ஆகாயத்தை நோக்கி பறக்கவிடப்படும் அற்புத காட்சி இடம்பெறும்.

இரவு நிகழ்ச்சிகள் 7 மணிக்கு **L. S.** ஜெகநாதன், நடராசா குழுவினரின் நாதஸ்வர கச்சேரியுடன் ஆரம்பமாகும்

அதனைத் தொடர்ந்து இலங்கை ரூபவாகினி, வானொலி புகழ் கலைஞர்களுடன் ரவி ஜெகன் இணைந்து யாழ். மாவட்டத்தில் முதன்முதலாக வழங்கும்

# சித்தாரா - தெய்வீக ராகங்கள்

இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும்.

இரவின் நிகழ்ச்சியில் இடைவேளையின் போது 50 அடி உயரமான இரண்டு இராட்சத புகைக்குண்டுகளும் ஆகாயத்தில் பறக்க விடப்படும்

❋ இருமைல் நீளமான விதிச் சோடனைகள்,
❋ பத்திற்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள்,
❋ பல கண்கவர் மின்சார வளைவுகள்,
❋ பல மின்இயந்திரங்களின் ஒளியமைப்பு,
❋ இவற்றுடன்கூட நூற்றுக்கணக்கான புகைக்குண்டுகள் ஆகாயத்தில் பறக்கும் அரிய காட்சி!

யாவும் ஒன்று சேர்ந்து வல்வை நகரை இந்திரலோகமாக மாற்றவிருக்கும் அற்புதக் காட்சியை காணவாரீர்! தமிழ்ஈழ மக்களே!!
காணத் தவறாதீர் ! தவறியபின் வருந்தாதீர் !!

❋ விழா முடிந்ததும் குடாநாட்டின் எல்லா பாகங்களுக்கும் போக்குவரத்து வசதி ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

வல்வை மக்கள்

B 621

# சோவியத் யூனியனிலிருந்து லட்விய குடியரசும் பிரிந்தது; பாராளுமன்றம் தீர்மானம்!

(மொஸ்கோ)

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சுதந்திரம் பெற்றுவிட்டதாக லட்விய குடியரசின் பாராளுமன்றம் வெள்ளிக்கிழமை பிரகடனம் செய்துள்ளது.

மொஸ்கோவிடம் இருந்து தாம்தொடர்பை துண்டித்துக் கொண்டதாக லட்வியா அறிவித்தமை குறித்து இதுவரை சோவியத் அரசிடம் இருந்து எதுவித கருத்துக்களும் வரவில்லை. [சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்ட மூன்றாவது அரசாக இது காணப்படுகிறது.

லட்வியப் பாராளுமன்றம் இச் சுதந்திர பிரகடனத்தை அறிவித்துள்ளது. 138 வாக்குகள் இச் சுதந்திர பிரகடனத்திற்கு ஆதரவாக இடப்பட்டன. எதிர்த்து எந்தவொரு வாக்குகளும் இடப்படவில்லை. ஆனால் 57 வாக்காளர்கள் இவ்வாக்கெடுப்பை பகிஷ்கரித்தனர்.

அத்துடன் இச் சுதந்திரம் பற்றிக் குறிப்பிட்ட லட்விய பாராளுமன்ற உறுப்பினர் நெஸ்டன் 50 வருடங்கள் பொறுமையாக இருந்து இச் சுதந்திரத்தை தாம் பிரகடனப்படுத்தியதாக குறிப்பிட்டார்.

1922 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு மீண்டும் அமுலுக்கு கொண்டு வரப்பட்டதாக லட்வியா அறிவித்துள்ளது.

புதிய அரசியல் யாப்பு தயாரிக்கப்படும் வரை சோவியத் யூனியன் குற்றவியல் சட்ட விதிகளே பெரும்பாலும் நடைமுறையில் இருக்கும். இவ்வாறு படிப்படியாக சுதந்திரம் பெறுவதற்கான நடவடிக்கை எடுப்பதன் மூலம் அந்நியக் குடியரசான லித்வேனியாவுக்கு ஏற்பட்ட நிலை லட்பியாவுக்கு ஏற்படுவதை தடுக்க முடியும் என அதன் ஆட்சியாளர்கள் கூறினர்.

இதற்கு முன் சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் எந்தவொரு குடியரசுக்கும் பிரிந்துசெல்லும் உரிமை உண்டு என்றும் ஆனால் அவை படிப்படியாக அமைய வேண்டும் எனக் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கோர்பச்சேவுக்கு நெருக்கடியா?

(வாஷிங்டன்)



சோவியத் ஜனாதிபதிகொர்பச்சேவ் பதவியில் இருந்து விலக்கப்படலாம் என்பதையிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கவலைதெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 25 ஆம் திகதிரஷ்யாவில் நடைபெற்ற சம்பவத்தின் போது 6000 சோவியத் படைவீரர்கள் ஊர்வலம் போனதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர் என்ற செய்தியினை அடுத்தே அமெரிக்க ஜனாதிபதி இவ்வறிக்கையை விடுத்துள்ளார்.

அதாவது கொர்பச் சேவின் கொள்கைகளுக்கு எதிராக



இராணுவத்தினர் கடந்த பெப்பிரவரியில்கிளர்ந்தெழுந்தமை பற்றிய அறிக்கை பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

அதே வேளை சோவியத் படைகள் ஜனாதிபதி கொர்பச்சேவுக்கு எதிராக நடந்து கொண்டனஎன்று நோட்டோ அணி விட்ட செய்தியினை சோவியத் உயர் அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

மொன்கோவுக்கு படைகள் கொண்டுவரப்படவில்லை என்றும் ஜனாதிபதிக்கு எந்தநெருக்கடியும் ஏற்படவில்லைஎன்றும் ஜனாதிபதியின் பேச்சாளர் அலெக்சாண்டர்யாப்போ உறுதிபடக் கூறியுள்ளார்.

## வவுனியாவில் வீதி புனரமைக்க பிரிட்டிஷ் நிறுவனம் உதவி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் மிகவும் மோசமாகப் பாதிப்படைந்துள்ள முக்கியமான மூன்று வீதிகளை புனருத்தாரணம் செய்வதற்கு பிரித்தானியஅபிவிருத்தி நிறுவனம் உதவவுள்ளது.

புளியங்குளம்–நெடுங்கேணி வீதி, நெளுக்குளம் - நேரியகுளம் வீதி, வவுனியா ஹொரவப்பொத்தானை வீதி போன்றவற்றை திருத்தி அமைப்பதற்கே மேற்படி நிறுவனம் உதவுகிறது.

இவ்வீதிகளைப் பார்வையிட இந்த நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் எதிர் வரும் ஏழாம்திகதி வவுனியா வர உள்ளனர்.

சில வருடங்களுக்கு முன்பே மேற்படி வீதிகளைத் திருத்துவது என்ற தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும் கடந்தகால வன்செயல் சம்பவங்களினால் இவ்வேலைகளை ஆரம்பிக்க முடியாமல் போய்விட்டது என்று கூறப்பட்டது.

புளியங்குளம்- நெடுங்கேணி வீதி சீர்குலைந்திருப்பதால் போக்குவரத்து மேற்கொள்வதில் மக்கள் கஷ்டப்படுகின்றனர் என்று 'ஈழநாதம்' அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது தெரிந்ததே. (தி)

## உள்ளூராட்சித் தேர்தலில் தட்சரின் கட்சி படுதோல்வி

(லண்டன்)

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் கட்சியை விட எதிர்க்கட்சிக்கு கூடுதலான வாக்குகள் கிடைத்திருக்கின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை வரை வெளிவந்த முடிவுகளின் அடிப்படையில் சுமார் 285 இடங்களில் தொழிற்கட்சி வெற்றி பெற்றிருக்கிறது.

கன்சவேட்டிவ் கட்சி முன்னர் பெற்று இருந்த 197 இடங்களில் தோல்வி கண்டிருக்கிறது. சமூக ஜனநாயகக் கட்சியும் முன்னர் பெற்ற 40 இடங்களையும் இழந்துள்ளது.

தொழிற்கட்சி 1, 590இடங்களிலும் ஆளும் கட்சியான கன்சவேட்டிவ்கட்சி 550இடங்களிலும் வெற்றி பெறலாம் எனத் தெரிகிறது.

அதே வேளை பிரதம மந்திரிமாக்கிரட் தட்சரின் ஆளும் கட்சியான கன்சவேட்டிவ் கட்சிக்கு செல்வாக்கு குறைந்து வருவதாகவும் கருதப்படுகிறது.

## நேபாள பிரதமருக்கு அழைப்பு

(காட்மண்டு)

இந்தியாவிற்கும் நேபாளத்திற்கும் இடையில் நீண்டநாட்களாக இருந்துவரும் வர்த்தகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது பற்றி பேச்சுவார்த்தை நடத்த வருமாறு நேபாள பிரதம மந்திரிக்கு வி. பி. சிங் அழைப்பு விடுத்துள்ளார்.

நேபாள பிரதம மந்திரி கிருஷ்ணபிரசாத் பட்டாராயை இந்தியாவிற்கு கூடிய விரைவில் வரும்படி இந்தியப் பிரதமர் அழைப்பு விடுத்திருக்கும் செய்தியை நேபாள நிதி அமைச்சர் தெய்வேந்திரா பந்திரே நேற்று அறிவித்தார்.

## 4000 ரூபா கொடுப்பனவிற்கு 95 போலிப் பெயர்கள் பதிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் புனர்வாழ்வுக் கொடுப்பனவு 4000 ரூபாவிற்கு 95 போலிப் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு பெறப்பட்டுள்ளதாக உள்ளக கணக்காய்வுப் பிரிவு விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கிராமசேவை அலுவலகர் விசாரணையில் பின்வருமாறு கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

தமது பிரிவுகளில் சில பெயர்களைத் தந்து பதிவு செய்யுமாறு உதவி அரச

### பருத்தித்துறை

## டிப்போவின் கோரிக்கைக்கு யாழ்.டிப்போவில் பதில் இல்லை!

(பருத்தித்துறை)

மட்டக்களப்புக்கு பருத்தித்துறை டிப்போவிலிருந்து பஸ் சேவையை ஆரம்பிக்கவேண்டுமென பருத்தித்துறை பிரஜைகள்குழு வடபிராந்திய போக்குவரத்துச்சபையிடம் முன்னர் கோரியிருந்தது.

இதற்கு முன்னர் இங்கு கடமையாற்றிய பொது முகாமை

நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பிரஜைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை டிப்போ தற்போது திருக்கோணமலை, மன்னார், வவுனியா, கொழும்பு போன்ற தூர இடங்களுக்கு பஸ் சேவையை நடாத்துவதுபோல மட்டக்க

## பொலிகண்டியில் மல்யுத்த போட்டி

(முல்லைத்தீவு)

மறைந்த விடுதலைப்புலிகளின் ஞாபகார்த்தமாக பொலிகண்டி ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தினரால் அண்மையில் நடாத்தப்பட்ட மல்யுத்தப் போட்டியில் நூற்றுக்கும் அதிகமான வீரர்கள்

### யாழ்ப்பாணம்

## நண்பர்களின் ஆலோசனையின் பேரிலேயே நான் போகவில்லை

- தேவராஜ்

(கொழும்பு)

எனது நெருங்கிய நண்பர்கள் யாழ்ப்பாணப் பயணத்தைக் கைவிடும்படி எனக்கு ஆலோசனை வழங்கியதால் நான் யாழ்ப்பாணம் போகவில்லை. என்பது தான் உண்மை. மற்றவர்கள் பொதுவாகக் கருதுவது போல், யாழ்ப்பாணம் போகவேண்டாம் என்று ஜனாதிபதி என்னைத் தடை செய்யவில்லை. இவ்வாறு இந்து சமய, தமிழ்

வித்தார்.

மாவிட்டபுரக் கோயிலுக்கும், தேருக்கும் ஏற்பட்ட அழிவுகளை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததும், தான் உதவி அரசாங்க அதிபர் மூலம் கோயிலுக்கு ஒட்டுப்பலகையும், மரமும் வழங்க ஏற்பாடுகள் செய்துள்ளதாகவும், தேரைப் புனரமைக்க சிறபாசாரிகளை ஒழுங்கு செய்யப் போவதாகவும் தெரிவித்தார்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வாழைச்சேனை உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கல்குடா 40, முருத்தானை 40, காகித நகர் 15 என 3 கிராம சேவை அலுவலகர் பிரிவுகளில் இம் மோசடிகள் இடம் பெற்றுள்ளது.

3 இலட்சத்து 96,000 ரூபா மோசடி செய்யப்பட்ட தொகையாகும்.

இது தொடர்பான விசாரணையில் மேற்படி கிராம சேவை அலுவலகர்கள் மூவர் வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டு தற்போது மீண்டும் வேலை வழங்கப் பெயர்களைத் தந்து பதிவு செய்யுமாறு உதவி அரச அதிபர் பணிப்புரை விடுத்தார்.

அவரது பணிப்புரையும், அன்றைய சூழ்நிலை காரணமாக அப் பெயர்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அப் பெயர்களுக்குரியவர்கள் தமது பகுதியில் இல்லை என்றும் தெரிவித்துள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

உதவி அரச அதிபர் ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம் பெற்றவர் கடமையாற்றியவர் என்றும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

# கிளிநொச்சி நகரில் மக்களும் வியாபாரிகளும் அவதி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் உள்ள தற்காலிக பொதுச்சந்தையில் பொதுமக்களும், வியாபாரிகளும் தினமும் பெரும் அவதிப்படுகின்றனர்

இந்த தற்காலிக சந்தை கிடுகுகளால் வேயப்பட்டிருப்பதால் சிலதினங்களுக்கு முன்னர் இங்கு பெய்த மழையினால் ஒழுக்குஏற்பட்டு விற்பனைப் பொருட்களும் நனைய வேண்டி ஏற்பட்டது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள இந்த சந்தைக்கட்டடம் 1984 க்கு பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் முற்றாக சேதமடைந்திருந்தது பின்னர் 1987 க்குப்பின்னர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வியாபாரிகள் வர்த்தகம் செய்யத்தொடங்கினார்கள்.

ஆனால் பல லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட பொதுச்சந்தை இன்னும் ஆடு மாடுகள் தங்கும் இடமாகவும் பற்றைக்காடாகவும் காணப்படுகிறது.

இதையாவது சம்பந்தப்பட்டவர்கள் திறந்து தாம் செளகரியமாக வியாபாரம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி விவசாயிகளும் வர்த்தகர்களும் ஈழநாதத்துக்கு தெரிவித்தனர்.

# நெல்லியடியில் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி நெல்லியடி கிளையில் இன்று 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆயிரம் ரூபா மீளக் குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

அதன் கிராமசேவையாளர் பிரிவுகள் வருமாறு,

கரணவாய் மேற்கு, கரணவாய் தெற்கு, கரணவாய் வடக்கு, கரணவாய் கிழக்கு, கரணவாய் மத்தி, துன்னாலை மேற்கு, துன்னாலை தெற்கு, துன்னாலை கிழக்கு, கப்புது.

# பொதுச்சந்தை மூடப்பட்டுள்ளது

(வந்தாறுமூலை)

பிரதேச சபையால் நடத்தப்படும் ஏறாவூர் பற்று செங்கலடி பொதுச்சந்தை நீண்ட நாட்களாக பூட்டிய நிலையில் இருக்கின்றது இதனால் மக்கள் தமதுவியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

விசேட ஆணையாளர்பூட்டி இருக்கும் கடைகளை திறந்து மீண்டும் செங்கலடி சந்தையை சீர் செய்ய வேண்டுமென இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (29)

இதற்கு முன்னர் இங்கு கடமையாற்றிய பொது முகாமையாளரும் அனுமதி தந்தார் எனவும் ஆனால் இதுவரை அதனை ஆரம்பிக்க எதுவித இடங்களுக்கு பஸ் சேவையை நடாத்துவதுபோல மட்டக்களப்புக்கும் நடாத்த அனுமதிக்கவேண்டும் என அந்த உறுப்பினர் தெரிவித்தார்.

# மலேரியா தடுப்பு ஊழியர் சம்பளம் ஒழுங்கு இல்லை

(கிளிநொச்சி)

வடகிழக்கு மாகாணசபையின் அசமந்த போக்கினால் மலேரியாத் தடுப்பு இயக்க சமயா சமய ஊழியர்கள் உரிய நேரத்தில் தமது ஊதியத்தைப் பெறமுடியாது உள்ளனர். மார்ச், ஏப்ரல் மாதச் சம்பளங்கள் மே மாதமாகியும் கூட இன்னும் வழங்கப்படவில்லை

மலேரியாத் தடுப்பு இயக்க சமயாசமய ஊழியர்களுக்கு முன்பு கொழும்பிலிருந்து சம்பளம் அனுப்பப்பட்டதாம். அப்போது முதல் மாதச் சம்பளம் அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன் கிடைத்து வந்ததாம்.

தற்போது வடகிழக்கு மாகாணசபையே தமக்கு சம்பளம் வழங்குகிறதாம். அன்றிலிருந்து இன்றுவரை ஊழியர்க்கான சம்பளம் தாமதமாகவே கிடைக்கிறதாம்.

# வேலணை ஆஸ்பத்திரி திருத்தியமைக்க வேண்டும்

(தீவுப்பகுதி)

வேலணை கிராமிய ஆஸ்பத்திரி நீண்ட பல வருடங்களாக திருத்தம் செய்யப்படாத நிலையில் கட்டிடங்கள் வெடித்தும், சேதமுற்றும் காணப்படுகின்றன.

தரை வெடிப்பினால் அழுக்குகள் தேங்கி நோய்பரவ ஏதுவாகின்றது. மலசலக்கூட கதவுகள்பல உடைந்து வெளியாக காட்சி தருகின்றது.

உணவு தயாரிக்கும் குசினியும் இதே நிலையில் உள்ளது. நல்ல திறமைமிக்க வைத்தியரைக் கொண்டுள்ள இந்த ஆஸ்பத்திரி திறமையாக இயங்கி வருகின்ற போதிலும் வைத்தியசாலை பல வசதியீனங்களைக் கொண்டுள்ளதாக இருக்கின்றது. உடனடியாக இந்த ஆஸ்பத்திரிப்பக்கம் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று இப்பகுதி பொதுஸ்தாபனங்கள் கோருகின்றன.

இங்குள்ள பலகட்டில்களின் மெத்தைகள் பழுதடைதந்த நிலையில் உள்ளது.

வேலணை அரசினர் கிராமிய ஆஸ்பத்திரியில் போதியபடுக்கைவசதிகள் இல்லாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது இதனால்நோயாளர்கள் இங்கு தங்கி சிகிச்சைபெற முடியவில்லை'

# புதிய தலைவர்

(அம்பாறை)

கல்முனை நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் 1990, 1991 ஆம் ஆண்டுக்கான தலைவராக ஜனாப். என் எம்.காரியப்பர்(சட்டத்தரணி) சட்டத்தரணிகளால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

சமாதான நீதிபதியும், உத்தியோகப்பற்றற்ற நீதிவானுமாகிய இவர், கல்முனை உவெஸ்லி உயர்தர கல்லூரியின் பழைய மாணவரும், பொதுப்பணியில் ஈடுபாடு கொண்டவருமாவார். (48)

# காத்தவராயன் நாடகம்

(வவுனியா)

எதிர் வரும் ஒன்பதாம் திகதி புதன் கிழமை வவுனியா பண்டாரிகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வெளியில் காத்தவராயன் நாடகம் அரங்கேற உள்ளது.

முள்ளியவளை உதயகலா நாடகக்கலா மன்றம் இந்நாடகத்தை அரங்கேற்ற உள்ளது. (தி)

யுத்தப் போட்டியில் நூற்றுக்கும் அதிகமான வீரர்கள் பங்குகொண்டனர். பத்துப்பிரிவாக நடைபெற்ற இப்போட்டியில் முல்லை மாவட்டத்தில் இருந்து எட்டு வீரர்கள் பங்கு பற்றி ஐந்து வெள்ளிக் கிண்ணங்களை சுவிகரித்துக் கொண்டனர்.

அல்பிரட் சாள்ஸ்-ராஜன், யோசப் யூஜிற் மரியராஜா-ராஜன் ஆசைப்பிள்ளை-ராஜன் ஆகியோர் சம்பியனாவும், பிலிப்பையா அன்ரன் சிறீ ஜீவன் ஆகியோர் இரண்டாவது இடத்தையும் பெற்றனர் இவர்கள் அனைவரும் முல்லைத்தீவு அல்பிரட் இமானுவல் அவர்களின் மாணவர்கள் ஆவர். (58)

னைத் தடை செய்யவில்லை. இவ்வாறு இந்து சமய, தமிழ் கலாசார விவகார அமைச்சர் பி. பி. தேவராஜ் கடந்த திங்களன்று தனது அமைச்சில் நடாத்திய பத்திரிகையாளர் மாகநோட்டில் விளக்கினார்.

சில மாதங்களுக்கிடையில் தான் யாழ்ப்பாணம் செல்ல விருப்பதாகவும், தனக்குப் பதிலாக தனது அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் யாழ்ப்பாணம் சென்று இந்து கலாசார செயற்பாடுகள் தொடர்பாகச் சம்பந்தப் பட்டவர்களைக் கண்டு திரும்பியுள்ளார்கள் என்றார்.

தான் குருகுலங்களை யாழ்ப்பாணத்தில் நிறுவத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரி

# பீடித்தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

(அம்பாறை)

இலங்கையில் பீடி உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் தற்போது வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருவதையிட்டு கல்முனைக்குடி முதலாம் குறிச்சி மட்டுப்படுத்தப்பட்ட பீடித் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால்விசேட பொதுக் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன:-

சிறுகைத்தொழில் திணைக்களத்தில் தொடர்பு கொண்டு தொழிலாளர்களுக்குதொழில் வாய்ப்பளிக்கவேண்டும்.

புனர்வாழ்வு அமைச்சின் நிவாரண உதவி பெற்று சுய தொழில் வாய்ப்புக்களைப் பெறவேண்டும்.

சங்கத்தால் உற்பத்தி செய்யப்படும் பீடிகளை உள்ளூர் சந்தைகளில் சந்தைப்படுத்துவதற்கு இப்பிரதேசத்திலுள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வரவேண்டும் எனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டது.

மேற்படி சங்கத்தின் தலைவர் ஜனாப் எம். பி. மொகிடீன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெருந்தொகையான பீடித் தொழிலாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (48)

# சுய தொழில் முயற்சிக்காக குடும்பம் ஒன்றுக்கு '5000 ரூபா

(கொழும்புத்துறை)

யாழ்.உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் கொழும்புத்துறை கிராமத்திற்கு இருபது பேர்கள் கொண்ட இரு நிறுவனங்களுக்கு சுய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காகக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்திற்கு ரூபா 5000/- அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுச் சபை உறுப்பினர்கள் இருபது பேரும், கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கப் பொதுச்சபை உறுப்பினர்கள் இருபது பேரும் இத்திட்டத்தால் நன்மை அடைவர்.

இத்திட்டம் வடக்கு கிழக்கு மாகாணசபையின் ஊடாகவே நடைமுறைப் படுத்தப் பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் பிரகாரம் யாழ்.குடா நாட்டில் இயங்கும் நான்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் இத்திட்டத்தைச் செயற்படுத்தப்படுவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.செயலகத் திட்டமிடல் பகுதி தெரிவித்துள்ளது.

இக்கடன் வழங்கும் திட்டத்திற்கு இது வரை யாழ்.மாவட்டத்தில் 66 பேர்கள் விண்ணப்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

ஒழுங்கு செய்யப் போவதாகவும் தெரிவித்தார்.

# மோட்டார்சைக்கிள் கார் விபத்து ஒருவர்பலி

(வவுனியா)

கனகராயன்குளத்தில்இடம் பெற்ற மோட்டார்சைக்கிள், கார் விபத்தில் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். இன்னொருவர் பலத்தகாயங்களுக்குள்ளானார்.

இச்சம்பவம் கடந்த புதன் கிழமை (2.5.90) இடம் பெற்றது.

பின்னால் வந்த கார், எதிர்பாராத விதாமக முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிளை மோதியதில், அதை ஓட்டி வந்த மோகன் என்பவர் பலியானார் என்றும் பின் சீற்றில் அமர்ந்திருந்தவர் பலத்த காயங்களுக்குள்ளானார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர், அவசர சிகிச்சைக்காக மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வீதிகளின் அவல நிலை

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியிலுள்ள பல வீதிகள் நீண்ட காலமாகத் திருத்தம் செய்து பராமரிக்கப்படாத நிலையில் குன்றும், குழியுமாக உள்ளது.

குறிப்பாக நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை ஆகிய பகுதிகளில் உள்ள வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு உதவாத நிலையில் உள்ளது.



ரம்ழான் பெருநாளை முன்னிட்டு காத்தான் குடி மீரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலாசார விழாவில் காத்தான் குடி உதவி அரசாங்க அதிபர் ஜனாப், எம். உதுமா லெப்பை தலைமை உரையாற்றுவதும், மட்டக்களப்பு அரச அதிபர் உரையாற்றுவதையும் காணலாம்.



கலாசார விழாவைக் காண வந்த மக்களின் ஒரு பகுதி



கவியரங்கில் கலந்து கொண்ட கவிஞர் பதிய தளபாபாரூக் அவர்களும், கவியரங்கை ஆரம்பித்து வைத்த கவிஞர் சாந்தி முகைதீனும்

## பருத் - கொழும்பு பஸ் சேவை

(பருத்தித்துறை)

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ நிறுத்திவைத்த பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவையை கடந்த புதன் கிழமை முதல் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

பருத்தித்துறை - கொழும்பு பஸ் சேவை முன்னர் நடாத்தப்பட்டு வந்தபோதும் இரவு நேர புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டதை யடுத்து பருத்தித்துறை டிப்போ இக் கொழும்பு பஸ் சேவையை நிறுத்தியிருந்தது. (25)


உங்கள் வீடுகளை உறுதியான இரும்பு, உருக்குத் தளபாடங்கள் மூலம் அழகுபடுத்துங்கள்

எங்கள் கைவண்ணத்தில் உறுதியான வேலைப்பாடுகளுடன்

❋ கட்டில் ❋ கதிரை ❋ மேசை ❋ சாய்மனைக்கதிரை ❋ பிளேட் றக்ஸ் ❋ பூஞ்சாடித் தாங்கி இன்னும்

பலபல தளபாடங்கள் ஓடர்களுக்கும் செய்துதரக் காத்திருக்கிறோம் விற்பனைக்கும் உண்டு.

விற்பனையாளர் (பெண்) ஒருவர் தேவை.

உடுவில் பகுதியில் வசிப்பவர் விரும்பத்தக்கது. (சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்)

அனைத்திற்கும்:-

மொடேர்ன் ஸ்ரீல் வேக்ஸ்

(உடுவில் மகளீர் கல்லூரிக்கு அருகாமையில்)

மானிப்பாய் வீதி, உடுவில்.

(B 868)


## கிளிநொச்சிக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர்ப் பகுதியும் அதனை அண்டியுள்ள பகுதிகளுக்கும் குழாய் மூலம் குடிநீரை வெகு விரைவில் வழங்க ஆவன செய்யும்படி கிளிநொச்சி அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் பணித்துள்ளார்.

கிளிநொச்சி நகரில் கடந்த பல வருடங்களுக்கு முன் பாரிய நீர்த்தொட்டி ஒன்று அமைக்கப்பட்டது. அதன் மூலம் குழாய்களைப் பொருத்தி, கிளிநொச்சி நகரப்பகுதிக்கும் அதனை அண்டியுள்ள கிராமப் பகுதிகளுக்கும் நீர் வழங்கத் திட்டமிடப்பட்டது.

இதுவரை சுமார் 50 குழாய்கள் மட்டுமே அமைக்கப்பட்டு, சில இடங்களுக்குச் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் வழங்கும் இலக்கு 100 ஆக இருந்தும் இதுவரை அவை பூர்த்தி செய்யப்படாததால், அவற்றை விரைவில் செய்துமுடிக்கும்படி அரசாங்க அதிபர் பணித்துள்ளார். (49)

## கிரிக்கெட் மத்தியஸ்தர் பரீட்சை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த கிரிக்கெட் மத்தியஸ்தருக்கான பரீட்சை பின்போடப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## கிருஸ்ணானந்தன் செயற்திட்டங்கள்

பொருளியலாளர் அமரர் கிருஸ்ணானந்தன் தொடர்பாக கல்வி, சமூக அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்களை வகுத்து அமுல்படுத்த


COMPUTER PROGRAMMING

**BASIC Programming Course** இற்கான புதிய பிரிவுகள்

12—05—1990 (Sat & Sun BATCH)
16—05—1990 (Wed & Thur. BATCH)
9. 30 மணிக்கு ஆரம்பமாகின்றன.

IDP COMPUTER CENTRE, 342, K. K. S Road, JAFFNA.

IDP - மல்லாகம் கிளையில் 4-00 மணிக்கு புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

(B/ 624)



தற்கால நவநாகரிக உலகில்....

❋ உங்கள் வீட்டு ஜன்னல்களுக்கு அதி நவீன டிசைன்களில் வகை வகையான கிறில் கண்ணாடிகள்...

❋ இத்துடன் நினைவை விட்டகலாத வண்ணப் படங்கள் உங்கள் உறவினர் போட்டோக்கள் எதுவானாலும் தரமான முறையில் மிகமிகப் பாதுகாப்பாக பிறேம் செய்யலாம்.



❋❋ சுன்னாகத்தில்... நம்பிக்கையுடன்...
❋❋ உங்கள் உணவு பொருட்களான...

❋ நெல் உடைப்பதற்கும்
❋ அரிசி திட்டுதல்
❋ மாவு அரைத்தல் அத்துடன்
❋ மிளகாய் தூள் அரைத்தல்

❋❋ இவை அனைத்தையும் உங்களுக்கு உடனுக்குடன்

✲ பக்திப் படங்கள், சினிமாப் படங்கள் இன்னும் தேவையான சீனறிப் படங்கள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

✲ சகல தரமான கண்ணாடி வகைகள் அனைத்தும் திறம்பட வெடிக் கொடுக்க நாடுங்கள்...

## வாசுகி பிக்சர் பலஸ்

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

(B/865)


களை வகுத்து அமுல்படுத்த கலந்துரையாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்று பி. பகல் 4 மணிக்கு இக்கலந்துரையாடல் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அமரர் கிருஸ்ணானந்தன் தொடர்பான தகவல் அறிந்தவர்கள் அவரது ஆக்கங்களை வைத்திருப்போர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.


திருப்தியான முறையில் செய்து தரவும்
மற்றும்
விற்பனைக்கு, தவிடு, பிண்ணாக்கு, கோழித்தீன்
ஆகியன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

## இரத்தினம் மில்

ஸ்ரேஷன் வீதி, சுன்னாகம்.

(B. 867)



## உதவித் தாதியர் பயிற்சி நெறி

## TRAINING FOR NURSES AIDE

19-5-90 இல் ஆரம்பமாகவுள்ளன

1. தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N. O) விரிவுரைகள் நடைபெறுகின்றன
2. பதினெட்டு மாதகால பாடத்திட்டங்கள் ஆறுமாதகால செய்முறைப் பயிற்சிகள்
3. செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ்நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்தியசாலையில் நடைபெறுகின்றன
4. அரச அங்கீகாரம் பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்
5. பாடத்திட்டங்கள் யாவும் தமிழ் மொழிமூலம் போதிக்கப்படுகின்றன
6. இலவச ''அக்குபங்சர்'' பயிற்சிகள்

உங்கள் பதிவுகட்கு:-

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

## சாயி மெடிக்கல் அக்கடமி

இல 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(B/817)



## சென்றல் ஸ்ருடியோ

No. 382 மாம்பழம் சந்தி
கண்டி றோட், அரியாலை.

புகைப்படம், பாஸ்போட், ஐடென்ரிக்காட் படம்
கலர்ப்படம், புளக் தயாரித்தல்
குறைந்த செலவில் சிறந்த முறையில்
செய்து கொடுப்பவர்கள்

✲ சென்றல் ஸ்ருடியோ ✲

(B/ 622)



உங்கள் தேவைகளுக்கு உகந்த வகையில்..

எம்மிடம்

- சகல விதமான பலசரக்கு சாமான்கள்
- தரமான முதலாம் தர அரிசி
- எல்லா வகையான பால்மா வகைகள்

மற்றும்

கால்நடைகளுக்கான தவிடு, பிண்ணாக்கு யாவும்

ஒரே இடத்தில்...

## சுகானன் ஸ்ரோர்

ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

(B/866)


தூய தமிழீழ நெஞ்சமே!
உன்னை
துரோகிகளின் துப்பாக்கி துளைத்ததா?

## ஈராண்டு நினைவு நாள்

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10 | 28 |
| 10 | 04 |
| 1915 | 1988 |



அமரர்

## ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை

திதி: **06 - 05 - 1990**

★ ஒரு புலியின் தந்தை என்பதால்
உன் உயிர் பறிக்கப்பட்டது
★ விடுதலைப் போராட்டம் ஒன்றின்
நடுவில்தான் நீ பலிஆனாய்
★ முதிர்ந்த வயதில் வஞ்சனையாளர் சூழ்ச்சியால்
உதிர்ந்த பழம் நீ
★ உன்வாழ்வும் எமக்கு ஒரு வழிகாட்டுதலே

ஐயா! உன்னை
எப்படி மறப்போம்?

187, ஆறுமுகம் வீதி,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.

மக்கள் - மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டர் – உறவினர்.

(B/ 446)

சிந்தனைக்கு

சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை யிரங்காரடீ – கிளியே
செம்மை மறந்தாரடீ

– பாரதியார்

# ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 06 - 05 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208


## கைபூவின் போதனைகள்

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணப்படாதவரை அபிவிருத்தி பற்றிப் பேசுவதில் அர்த்தமில்லையென்றும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்பட்டாலே பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியுமென்றும் கொழும்புக்கு வந்த ஜப்பான் பிரதமர் கைபூ அறிவுறுத்திச் சென்றிருக்கிறார்.

மனித உரிமைகள் மீறல் பற்றியும் கவலை தெரிவித்திருக்கிறார் ஜப்பான் பிரதமர்.

இலங்கைக்குத் தொடர்ந்து ஜப்பான் உதவியளிக்கும் என்றும் உறுதியளித்தாலும் இலங்கை அரசு எதிர்பார்த்தபடி பெரிய அளவில் உதவியளிக்க ஜப்பான் முன்வரவில்லையென்பது உண்மை.

விடுதலைப் புலிகள் என்று பெயர் குறிப்பிடா விட்டாலும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக முயற்சி மேற்கொண்டு ஜனாதிபதி பிரேமதாசா பேச்சுவார்த்தை நடத்தி வருவதற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாவது உலகமகாயுத்தத்தின்போது அமெரிக்கா வீசிய இரண்டு அணுகுண்டுகள் ஜப்பானின் நாகசாக்கி, ஹிரோஷிமா என்ற இரு நகரங்களை அழித்தன. இதன் பாதிப்பு இன்னமும் ஜப்பானில் முற்றாக நீங்கவில்லை.

ஆனாலும் இந்த அழிவுக்குப்பின் ஜப்பானியர்கள் கடுமையாக உழைத்தனர். இன்று ஜப்பான் பொருளாதாரத்தில் ஒரு வல்லரசாகத் தலைநிமிர்ந்து நிற்கிறது. உலகச் சந்தையில் அமெரிக்காவுக்குத் தலையிடி கொடுத்துக்கொண்டிருப்பது ஜப்பான் மட்டுமே.

நேற்றைய தொடர்ச்சி

# நெருக்கடிகால நீண்டகாலப் பொருளாதாரத் திட்டங்கள் மூலம் தமிழீழத்தை கட்டி எழுப்ப வேண்டும்

### நெருக்கடி காலப் பொருளாதாரத் திட்டம்

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் 1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது போராட்டத்தின் நெருக்கடியான காலத்தில் மக்களின் அத்தியாவசிய சேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்து கொள்வதை நோக்கமாகக் கொண்டது. கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட பாரிய பொருளாதாரத் தடைகளின்போது இந்நெருக்கடி காலப் பொருளாதாரத் திட்டமானது வெற்றிகரமாகப் பரீட்சிக்கப் பட்டது.

இத்திட்டத்தின் சில அம்சங்களாவன:

1. சிறு கைத்தொழில் முயற்சிகளான சவர்க்காரம். உடை, குளிர்பானம், ஜாம், பால்மா, வெண்கட்டி, பழரசம் என்பன உள்ளூரிலேயே உற்பத்தி செய்யப்பட்டன.

2. விலங்கு வளர்ப்புத் துறை, பால் உற்பத்தி என்பனவற்றில் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

3. விவசாய நிலமானது எல்லைநிலம், தோட்ட நிலம், மேட்டு நிலம், வயல் நிலம் எனப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் ஏற்ற விஞ்ஞான ரீதியிலான உற்பத்திகளைப் பற்றிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

4. களஞ்சியப்படுத்தக் கூடிய கிழங்கினங்கள், எண்ணெய் வடித்தெடுக்கக்கூடிய எள்ளு. நிலக்கடலை, ஆமணக்கு, சூரியகாந்தி என்பவற்றின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது.

...தைக் கட்டியெழுப்பும் நோக்கோடு நீண்டகால அடிப்படையில் எமது நிரந்தர வளங்களைப் பயன்படுத்துவதையும், அபிவிருத்தி செய்வதையும் அடிப்படையாகக் கொண்டதே இத்திட்டமாகும்.

இத்திட்டத்தின் அம்சங்களைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்.

(அ) கடல் வளம்

உலகிலேயே பலவகையான மீன் இனங்கள் உள்ள பிராந்தியமாகத் தென்கிழக்காசியப் பிராந்தியம் விளங்குகின்றது. ஆனால் கைத்தொழில் நாடுகளில் பயன்படுத்தப்படும் நவீன, விஞ்ஞான தொழில் நுட்ப முறைகளின் பற்றாக் குறைவால் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் கடல்வளம் முறையாகப்பயன்படுத்தப்படவில்லை.

திருக்கோவில்–மட்டக்களப்பு-திருகோணமலை– முல்லைத்தீவு - யாழ்ப்பாணம்-மன்னார்-காரைதீவு வரையான சுமார் 600 கி. மீட்டர் நீளமான கடற் பிராந்தியத்தைக் கொண்ட தமிழீழம் ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கும், மீன்வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் ஏற்றதாகும்.

இக்கடற் பிராந்தியங்களுக்கு அண்மையில் பல ஆறுகளும் ஓடுவதால் பெரிய அளவிலான மீன் வளர்ப்புத்திட்டங்களை மேற்கொள்ள முடியுமெனவும், இதன் மூலம் குனறந்தது 60,000 குடும்பங்கள் இக்கரையோரங்களில் குடியமர்த்தப்பட்டு, குறைந்தது 335,000 பேருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கமுடியுமெனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இவற்...

இருந்து 3.58 கிலோக் கலோரி சத்தி பெறப்படலாம். கோதுமைமாவின் இறக்கு மதியைக் குறைத்து ஒடியலின் பாவனையை ஊக்குவிக்க வேண்டும் தவிர பனைகளின் இருந்து இறக்கப்படும் பதநீர் சீனி உற்பத்திக்கு ஏற்றது .இது குளிர் பானம் இனிப்பு வகை என்பவற்றின் தயாரிப்பிலும் பயன் படுத்தக்கூடியது.

(இ.) கைத்தொழில்துறை

2ஆம் உலகப் போரில் ஏற்பட்ட இழப்புகளினால் ஜப்பானின் பொருளாதாரம் சீர் குலைந்தது. ஆனால் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் மக்களின் விடா முயற்சியினாலும் நவீன கைத்தொழில் திட்டங்களினாலும் மிகவும் குறைந்தளவு மூல,கனிப்பொருள் வளங்களைக்கொண்டிருந்தபோதும் இன்று பொருளாதாரத்தில் ஜப்பான் முன்னணி வகிக்கின்றது.

தமிழ் பகுதிகளில் காணப்படும் கண்ணாடி, களிமண், சுண்ணம்புக்கல் மற்றும் இரசாயனப் பொருட்களான மொணேரசைட் Zirkonium Silicate போன்றவற்றை மூலப் பொருட்களாகத் கொண்டு தொழிற்துறைகள் ஆரம்பிக்கப்படமுடியும்.

மிகக்குறைந்த விலையில் பெறப்படும் வைக்கோலை மூலப்பொருளாக கொண்டு வாழைச்சேனை காகிதத்தொழிற் சாலையில் மேற்கொள்ளப்படும் காகித உற்பத்தி தமிழீழம் முழுவதற்கும் போதுமானது.இத்தொழிற்சாலைநன்கு விஸ்தரிக்கப்படின் காகிதம் ஏற்றுமதி செய்யும் வாய்ப்புக்களும் உண்டு.

தமிழீழப் பகுதியில் ஏறக்கு...

கூடிய எமது மண்ணில் நவீன தொழில் நுட்பத்தைப் பயன் படுத்துவதன் மூலம் சூரிய சக்தியில் இருந்து மின்சக்தியைப் பெறும் முயற்சிகளை மேற்கொள்ள முடியும். தமிழ் ஈழத்தின் சில பகுதிகளில் ஏற்கனவே பரீட்சிக்கப்பட்ட காற்றாடிகள் நீர்ப்பாசனத்துறையில் தொடர்ந்து விஸ்தரிக்கப் படலாம்.

இன்று இந்தியா, சீனா போன்ற நாடுகளில் உயிரின, தாவரக்கழிவுகள் ஒன்று சேர்க்கப்பட்டு உருவாக்கப்படும் உயிரின வாயு பல நகரங்களில் விளக்குகள் எரிப்பதற்கான சக்தியைக் கொடுக்கின்றது. இம்முயற்சிகள் தமிழீழத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் உயிரின வாயு பிரித்தெடுக்கப்பட்டகழிவுகள் மிகச் சிறந்த பசளையாகப் பயன் படுத்தப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஊ) அந்நியச் செலாவணியும் மூலதனமும்

வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உழைப்பால் கிடைக்கும் அந்நியச் செலாவணியானதுஇன்றுஸ்ரீலங்காவில் நலிந்து வரும் பொருளாதாரத்தைக் காக்கவே பயன்படுகிறது. காணியாகவும், நகையாகவும் முடங்கும் இந்த மூலதனங்களைக் கொண்டு புதிய கைத் தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள் ஊக்குவிக்கப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் (ROOT) நீண்டகாலப் பொருளாதாரத் திட்டத்தின் சுருக்கமான சில அம்சங்களாகும். மேலும் இந் நிறுவனம் புதிய துறைகளில் தனது ஆய்வுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறது இதன் அடிப்படையில் ROOT தமிழீழ அபிவிருத்திக்கான சர்வதேச மாநாடு ஒன்றைக் கடந்த மார்ச் மாதம் இலண்டனில் நடாத்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தின் அரசியற் புறச்சூழ்நிலைகளினால் இடம் பெயர்ந்துள்ள கல்விமான்கள் தொழில்நுட்பவியலாளர்கள் மருத்துவர்கள் மற்றும் பல் துறையாளர்கள் சுதந்திரத் தமிழீழத்தின்பொருளாதாரப் புனர்நிர்மாணத்தை வெற்றிகரமாகச் சாதிக்கவும் சுரண்டல் முறைகளற்ற ஏற்றத் தாழ்வுகள் ஒழிந்த ஒரு சமத்துவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்ட பொருளாதாரத்தை நெறிப் படுத்தவும் தமது ஆற்றல்களையும் அறிவையும் பிரயோகிக்க முன்வர வேண்டும்.

நன்றி: சுதந்திர தாகம், நோர்வே.

# இலங்கை வங்கி மக்களுக்கு சிறந்த சேவையாற்றுகிறது

(பருத்தித்துறை)

பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டையும் மக்களின் வாழ்க்கைத்தர உயர்ச்சியையும் கருத்திற் கொண்டு இலங்கை வங்கி பல்வேறு வகையான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி...

அபிவிருத்தி உற்பத்தி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு வருபவர்களுக்கு இலங்கை வங்கி பல்வேறு வகையான உதவிகளை வழங்கும். விவசாயிகள் கடன்களை வங்கிகளில் பெற்று, அக்கடன்களை நாணயமாகத் திருப்பிச் செலுத்தினால் தொடர்ந்தும் வங்கிகளிடமிருந்து வேண்டிய...

நிற்கிறது. உலகச் [illegible]
தலையிடி கொடுத்துக்கொண்டிருப்பது ஜப்பான் மட்டுமே.

இலங்கையும் போரில் அழிந்து சிதைந்துபோய் இருக்கிறது. இதைப் புனரமைப்புச் செய்து கட்டி எழுப்புவதற்குக் கடனையும் உதவியையுமே இலங்கை நம்பியிருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி கைவிரித்துவிட்டது. மற்றும் வெளிநாடுகளிலுள்ள நிறுவனங்களும் உதவியளிக்கத் தயங்குகின்றன.

இதுவரை கிடைத்த உதவிகளும் சரியாகப் பயன் படுத்தப்படவில்லை. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணப்படாததும் ஸ்திரமான நிலை இல்லாததுமே இதற்குக் காரணம்.

இலங்கையில் நிரந்தர அமைதியில்லையென்றும் பொருளாதாரம் சீரழிந்துள்ளதாகவும் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும் தென்னிலங்கை அரசியல்வாதிகள் சிலர் வெளிநாடுகளில் செய்துவரும் பிரசாரமும் இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைப்பதைத் தடை செய்திருப்பதும் உண்மையே.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் இன்னமும் அதிகாரப்போட்டியிலேயே ஈடுபட்டுள்ளனர். தமிழ்மக்களை அடக்கி ஒடுக்குவதில்தான் தாம் அதிகாரத்துக்கு வர முடியுமென்ற மனப்பான்மை இன்னமும் அவர்களிடத்தில் நீங்கவில்லை.

இவற்றையெல்லாம் உணர்ந்துதான் இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படாதவரை பொருளாதார அபிவிருத்தி ஏற்பட முடியாது என்று ஜப்பான் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு பிரேமதாசா எடுக்கும் நடவடிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்பதற்காக எதிர்க்காமல் நாட்டை முன்னேற்றுவதற்காகவும் நிரந்தர அமைதி காண்பதற்காகவும் அரசியல் வேறுபாடுகளை மறந்து தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒத்துழைக்க முன்வர வேண்டியது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு மூன்றே மூன்று அம்சங்களை தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஏற்றுக்கொண்டால் பிரச்சினை சுலபமாகிவிடும்.

(1) தமிழ் மக்களைத் தமிழ்த் தேசிய இனம் என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் தாயகம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

(3) தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ள வேண்டும்.

இவற்றை ஏற்றுக் கொள்ளாத வரை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஆதிக்கப் போட்டியில் தொடர்ந்தும் ஈடுபட்டு நாட்டின் நலனைப் புறக் கணித்ததால் பாதிக்கப்படப்போவது சிறுபான்மையினர் மட்டுமல்ல பெரும்பான்மைச் சமூகமுமே என்பதைச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

---

றின் உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட்டது.

5. சில காலப்பகுதியில் மிதமாகக் கிடைக்கும் காய்கறிகள், பழங்கள், மீன், இறைச்சி போன்ற உணவுப் பொருட்களை அவை அரிதாகக் கிடைக்கும் காலப்பகுதியில் உபயோகிக்கக் கூடிய முறையில் பதப்படுத்தப் பட்டன.

மேலே குறிப்பிடப்பட்டவை ஏற்கனவே நடை முறைப்படுத்தப்பட்ட அம்சங்களிற் சிலவாகும் தவிர, எரி பொருளுக்கு மாற்றாக அற்க கோலைக் கொண்டு இயங்கக் கூடிய சுழல் நீர்ப்பம்புகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### நீண்ட காலப் பொருளாதாரத் திட்டம்

சுதந்திர தமிழீழத்தின் விவசாய தொழிற்துறைகளைச் செம்மையாக விருத்தி செய்து சுயபூர்த்தியுள்ள பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்த நாடாகத் தமிழீழத் மெனவும் ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. இவற்றைத் தவிர பதனிடல், விற்பனை, ஏற்றுமதி ஆகியவற்றின் மூலமும் மேலும் புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்க முடியும்.

சிங்கறால் இன மீன்வளர்ப்புத் திட்டத்திற்கு ஏற்றதாக இன்று மேலைத்தேய நாடுகள் செயற்கைமுறையில்கடல் நீரைச்சூடாக்குகின்றன. ஆனால் எமது கடற்பிராந்தியத்தைச் சுற்றியுள்ள நீரின் வெப்பநிலை சிங்கறால் இன உற்பத்திக்குஏற்றதாயுள்ளது. எனவே இத் திட்டம் இங்கு ஊக்குவிக்கப்படும் வாய்ப்புகளும் உள்ளன.

**(ஆ.) பனை வளம்**

எமது மண்ணில் இன்று 20 இலட்சத்திற்கு மேல்பனைகள் காணப்படுகின்றன. பனையிலிருந்து பெறப்படும் ஒடியலானது அரிசி, மா, கிழங்கு, என்பவற்றை விடக்கூடிய அளவிற் காபோவைதரேற்றை கொண்டது. ஒரு கிராம் ஒடியலில்

களும் உள்ளன [illegible]

தமிழீழப் பகுதியில் ஏறக்குறைய20000ஏக்கரில் உற்பத்தி செய்யப்படும் கரும்பை மூலப் பொருளாகக்கொண்டு அம்பாறை, கந்தளாயில் உள்ள சீனித் தொழிற் சாலையில் 30-40 ஆயிரம் தொன் சீனி உற்பத்தி செய்யப்படுகின்றது. இத் தொழிற்சாலைகள் நவீனமயமாக்கப்படின் சீனி உற்பத்தியை மேலும் பல மடங்கு பெருக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழீழப் பிரதேசங்களான புல்மோட்டை, திருக்கோவில் பகுதிகளிலிருந்து பெறப்படும் இல்மனைற் ஏற்றுமதி செய்வது தவிர்க்கப்பட்டுக் கப்பல் விமானங்கள், ஏவுகணைகள் என்பனவற்றின் தயாரிப்புக்குப் பயன்படும் டைட்டேனியம் என்னும் விலையுயர்ந்த உலோகத்தை இல்மனைற்றில் இருந்து பிரித்தெடுக்கும் தொழிற்றுறைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

**(ஈ) விவசாயம்**

விவசாயத் துறையை விஞ்ஞான ரீதியில் விருத்தி செய்யும்போது மனித வளம் உள்ளிட்ட சகல வளங்களையும் உச்சமாகப் பயன்படுத்தும் வகையிலான திட்டமிடலே அவசியமாகின்றது. கூட்டுறவு ரீதியில் அமைந்த இத்திட்டங்கள் எமது மண்ணுக்குரிய தானிய வகைகளைப் பயிரிடல் களஞ்சியப்படுத்தக்கூடிய தானியம் மற்றும் கிழங்கு வகைகளைப் பயிரிடல் கைத் தொழிற்றுறைக்கு வேண்டிய மூலப் பொருட்களைப் பெறக் கூடிய உற்பத்திகளைப் பெருக்குதல் என்பனவற்றை நோக்கமாகக் கொண்டு அமைதல் வேண்டும்.

மேலும் வடக்குக் கிழக்கின் விவசாய நிலங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படின் அரிசி முதல் மற்றைய தானிய வகைகள் வரையான தேவைகளுக்குத் தமிழீழம் மற்றைய நாடுகளை நம்பியிருக்கவேண்டிய நிலைமை தோன்றாது.

இத்தகைய முழுமையான பயன்பாட்டிற்கு ஏற்ற ரீதியில் நீர்ப்பாசனத்துறை விருத்தி செய்யப்படலும், நவீன இரசாயன உரங்கள்பற்றிய அறிவு வளர்க்கப்படலும் அவசிய மாகின்றது.

**(உ) மின்சக்தி எரிபொருள்**

இன்று மேலைத்தேய நாடுகளில் சூரிய சக்தியிலிருந்து மின் சக்தி பெறப்படுகின்றது. வருடத்தில் 75 வீதமான நாட்களில் சூரிய சக்தியைப் பெறக்

முழுமையாகப் [illegible]
நன்மைபெற வேண்டியது மக்களையே சார்ந்ததாகும்.

புலோலி மேற்கைச் சேர்ந்த 25 குடும்பங்களுக்கு விவசாயக் கடனாக இலங்கை வங்கியால் வழங்கப்பட்ட 5 லட்சம் ரூபாவும் விவசாயிகளால் ஒழுங்காகப் பயன்படுத்தப்பட்டு சிறந்த விளைவைப் பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இவ்வாறு புலோலி மேற்கு விவசாயிகள் சங்கத்தால் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் நடாத்தப்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை இலங்கை வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் குறிப்பிட்டார்.

விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. எஸ். விஸ்வநாதன் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு. மகாலிங்கம் குறிப்பிட்டதாவது:-

இப்பகுதி விவசாயிகள் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபட்டு வருவது பாராட்டப்பட வேண்டியதாகும்.

உதவிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வங்கியில் கடன்களை மட்டும் பெறுவதோடு நின்றுவிடாது தங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளம்படுத்துவதற்காக இலங்கை வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சேமிப்புத் திட்டங்களிலும் சேர்ந்து சேமிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வாழ்வை ஒளிமயப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

பருத்தித்துறை இலங்கை வங்கி கடன் வழங்கு உத்தியோகத்தர்களான திரு. கே. சிவகுமார், திரு. ஆர். பஞ்சலிங்கம் விவசாயிகளான திரு. கே. தங்கராசா, திரு. எஸ். செல்வராசா, திரு. கே. அருளம்பலம் ஆகியோரும் உரையாற்றினர். (25)

---

## பல்சிகிச்சை நிலையம் மூடப்படவுள்ளதா?

### மக்கள் மடல்

ஆசிரியர்
ஈழநாதம்,

பளை அரசினர் வைத்தியசாலையில் இயங்கி வந்த பல் சிசிச்சை நிலையத்திற்கு உரிய வைத்தியர்மாற்றமாகி சென்ற காரணத்தால் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும்மக்களும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வசிக்கும் மக்களும் நாளாந்தம் வைத்திய சாலைக்கு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர் இதற்கு உரிய அதிகாரிகள் இந்த விடயத்தை கவனத்தில் கொள்ளும்படி பச்சிலைப்பள்ளி வாழ் மக்கள் வேண்டுகின்றனர்.

எஸ். தம்பிராசா
பளை

## அக்கரைப்பற்று மெயின்வீதி அவலநிலை

ஆசிரியர்
ஈழநாதம்,

அக்கரைப்பற்று என்ற கிராமம் அம்பாறைமாவட்டத்தின் மத்தியில் அமைந்துள்ளது இந்த ஊரில் தற்போது முஸ்லிம்கள் தமிழர்கள் 50,000 மேற்பட்டோர் இங்கு வாழ்கின்றனர். இவர்களுக்கென்று ஒரே வீதி இந்த மெயின்வீதியாகும். இந்த ஊரில் சுமார் பத்து ஆயிரம் மோட்டார் சயிக்கிள் சுமார் 5,000 உளவு இயந்திரம் மோட்டார் கார் சுமார் 500 இருக்கிறது மாட்டுவண்டிகளும்இருக்கிறது இந்த வீதி அகலம் ஆறு அடி அதுவும் குன்றும் குழியுமாக இருக்கிறது இதனால் தினமும் வீதி விபத்துகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இந்த மெயின் வீதி திருத்தும் விடயமாக இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து திருத்தித் தருவார்களா என பொதுமக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

எம். ஏ. தாவூட் லெப்பை
அக்கரைப்பற்று

---

## சேவை நலன் பாராட்டு விழா

(தீவுப்பகுதி)

வேலணை கிழக்கைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. ச. மாணிக்கவாசகருக்கு இன்று வேலணை கிழக்கு மகாவித்தியாலயத்தில் பாராட்டு விழா நடைபெறும்.

---

(நேற்றைய தொடர்ச்சி)

### செயலாளர் கடமைகள்

★ முறைப்பாட்டுப் படிவத்தை வழங்குதலும், பதிவுகளைப் பேணலும்.
★ பிணக்குகளுடன் தொடர்பானவர்களுக்கு, அழைப்பாணைகளை விசாரணை தினத்துக்கு (7) ஏழு நாட்களுக்கு முன்பு அனுப்பி வைத்தல்.
★ விசாரணைக் குழு கூட்டத்தை ஒழுங்கு செய்தல்.
★ மன்றின் அறிக்கைகளையும், தீர்வுகளையும், மறு உறுப்பினர்களுடன் இணைந்து தயாரித்தல்.
★ இணக்க மன்றுப் பொறுப்பாளருடன் இணக்க மன்று விடயம்தொடர்பாக தொடர்பு கொள்ளல்.
★ விசாரணை நடைபெறும் தினத்தின் நிகழ்வு, அறிக்கையை தயாரித்து இணக்க மன்றின் பொறுப்பாளர் ஊடாக வட்ட அவைப் பிரிவுப் பொறுப்பாளருக்கு அனுப்பி வைத்தல்.

### பொருளாளரின் கடமைகள்

★ வரவு செலவுப் பதிவேடுகளைப் பேணுதலும், பற்றுச் சீட்டு வழங்குதலும்.
★ வரவு செலவுக் கணக்கு தயாரித்தல்.
★ மாதாந்த வரவு செலவுக் கணக்கு அறிக்கைகளை இணக்க மன்றின் பொறுப்பாளர் ஊடாக வட்ட அவைப் பிரிவுப் பொறுப்பாளருக்கு அனுப்பி வைத்தல்.

(முற்றும்)

ஈழநாதம்

# மலையக மக்களை வெளியேற்றுவது உவப்பானசெயலாக இருக்கமுடியாது

இலங்கைத்தீவில் பிறந்து வளர்ந்து உழைத்து வாழும் இந்த மக்களின் ஒரு சாராரை இந்த மண்ணிலிருந்து பிரித்தெடுப்பது தேசத்திற்கே உவப்பான செயலாக இருக்க முடியாதென்பதை வலியுறுத்திக் கூறி எந்த வகையிலான நாடு கடத்தலுக்கும் எடுக்கும் முயற்சிகளுக்கு எமது வன்மையான கண்டனத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறு மலையகமக்களை இந்தியாவுக்கு அனுப்புதல் தொடர்பாக ஈழவர் ஜனநாயக முன்னணியினர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வறிக்கையில் மலையகத்தை சார்ந்த மக்கள் மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சடந்த இருநூற்றாண்டு காலமாக இலங்கையினை வளங்கொழிக்கச் செய்வதற்காக உழைத்த இந்த மக்களை வெளியேற்ற முயல்வது நன்றி மறந்த செயலாகக் கணிக்கப்பட்டுவிடலாம். ''நாம்பிறந்தமண் இதுதான்'' ''நாம் இருக்கும் நாடு நமது தான்'' என முரசறைந்து நாட்டுப்பெற்றுடன் தேசிய ஐக்கியத்தை வலியுறுத்தும் வகையில் செயற்பட்டுவரும் மலையகமக்களின் ஒரு சாராரை வலுக்கட்டாயமாக இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப நினைப்பது எந்த வகையிலும் நியாயமாகத் தெரியவில்லை.

ஈழப்புரட்சியமைப்பானது மலையக மக்களின் நலன்களுக்காக நீண்ட காலமாகவே குரல் கொடுத்து வந்துள்ளது என்பதனை அனைவரும் அறிவர். திம்புப் பேச்சுவார்த்தைகளின் போதும் அதன் பின்னரும் மலையக மக்களின் அடிப்படை நலன்களை பிரதிபலித்து குரலெழுப்ப நாம் தவறியதே இல்லை. 1987 இல் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோதுகூட அவ்வொப்பந்தத்தில் மலையக மக்கள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டவை குறித்து எமது அதிருப்தியைப் பகிரங்கமாகவே தெரிவித்திருந்தோம்

கடந்த காலங்களில் ஏற்பட்ட சிறிமா சாஸ்த்திரி ஒப்பந்தம், சிறிமா இந்திரா ஒப்பந்தம் போன்றவை காலாவதியாகி ஆண்டுகள் பல கடந்து விட்டது என்பட.ன் அண்மைய இலங்கை இந்திய உடன்படிக்கைகள் கூட அரைகுறை உயிரில் ஊசலாடும் நிலையில் தமிழ்பேசும் மக்களின் ஒருசாரரான மலையக மக்களுக்கெதிராக ஒப்பந்தம் என்ற பூதத்தைக் கிளப்பி விடுவது பொருத்தமான செயலாக இருக்கமுடியாது என்றே நாம் கருதுகிறோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனாதைச் சிறுவர்களுக்கு களுதாவளையில் சரணாலயம்

(அம்பாறை)

பட்டிருப்புப் பிரதேசத்திலும் அனாதைச் சிறுவர்களுக்கான சரணாலயம் ஒன்று களுதாவளையில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட வன்செயல்களினால் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களுக்கு ஒரு புகலிடம் தேவையென்பதை உணர்ந்த பட்டிருப்புப் பிரதேசத்தில் உள்ள சமூக, சமய சேவையாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தர் குருகுலம் எனப் பெயர்கொண்ட இவ் அனாதைச் சிறுவர் இல்லம் 15 சிறுவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு மேலும் பல சிறுவர்களுக்குப் புகலிடமளிக்கவுள்ளது.

இவ்வில்லத்துக்குப் பொறுப்பாளராக சுவாமிஜி பொன்னையா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இக்குருகுலம் விரைவில் கூடுதலான சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ள விருப்பதால் தரும சிந்தையுள்ளவர்களிடம் இருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாக குருகுல உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (48)

## பாடசாலையில் குறைபாடுகள்

(காத்தான்குடி)

காத்தான்குடி மீராபாலிகா வித்தியாலயத்தில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் குறித்து பழயமாணவரும் பெற்றோரும் புகழ் தெரிவித்துள்ளனர்.

முக்கியமாக குடிநீர் இன்றி மாணவர்கள் வீடுகளுக்கு அலைகின்றனர். பாடசாலை மண்டபத்தில் உள்ள விளக்குகள் சீராக எரிவதில்லை என்றும் புகழ்கள் தெரிவிக்கப்படுகின்றன. (55)

## உயர் அதிகாரி.

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

பந்தப்பட்ட அதிகாரி தப்பித்துக்கொள்வதற்காகவே தன்னை தலைமறைவாக இருக்கும்படி நிர்ப்பந்தித்தார் என்றும் உண்மை மிக விரைவில் வெளிவரும் என்றும் தபால் புலனாய்வு அதிகாரி ஒருவரால் தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இவரின் தலைமறைவுபற்றி ஈழநாதம் மட்டுமே செய்தி வெளியிட்டிருந்த காரணத்தினால் ஈழநாதம் நிருபரிடம் மேற்படி தகவல்களை அவர் விஷேடமாகத் தெரிவித்தார். (தி)

## முரசுமோட்டைப் பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு 400 குடும்பங்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

ஆழமான கிணறுகளில் இருந்து நீர் இறைத்து உப உணவுச் செய்கையை மேற்கொள்ள தமது பகுதிக்கு மின்சாரத்தை விநியோகம் செய்யும்படி முரசுமோட்டையைச் சேர்ந்த சுமார் 400 குடும்பங்கள் இலங்கை மின்சார சபையைக் கேட்டுள்ளன.

வடபகுதியிலேயே நெற்செய்கைமூலம் கூடுதல்விளைச்சலைப் பெற்றுவரும் முரசுமோட்டை 1ஆம், 2ஆம், 3ஆம் பகுதி மக்கள் தமது குடியிருப்புக் காணியில் உப உணவுப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுவதற்காகவும், வீட்டுப் பாவனைக்குமாகவே இலங்கை மின்சார சபையிடமிருந்து மின்சாரத்தைக் கேட்டுள்ளனர். (49)

## கனிஷ்ட.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்கள் இருந்தும் இடப்பற்றாக்குறை நிலவுவதாகமக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

மேசை, கதிரை பற்றாக்குறையும் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

புதிதாக இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்ட ஆசிரியர்களைச் சேர்த்து பத்தொன்பது ஆசிரியர்கள் கல்வி கற்பித்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஊனமுற்றோர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோழிப்பண்ணை பராமரித் அப்பியாச கொப்பிகட்டுதல் போன்ற பல பயிற்சி நெறிகள் தற்போது கனேடிய ''சீடா'' நிறுவனத்தின் உதவியுடன் நடைபெற்று வருகிறது. விரைவில் ஊனமுற்றோருக்கான கொம்பியூட்டர் பயிற்சிநெறியுட்பட பல பயிற்சித்திட்டங்கள் புதிதாக தொடங்கவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைவரும் உடன் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளும்படி இச் சங்கத்தோர் வேண்டிக் கொள்கின்றனர்.

## பாதிக்கப்பட்ட

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குத் தான் முதலில் பணம் வழங்க வேண்டும் இவ்வாறு அரசாங்க

## ஒவியக் கண்காட்சியில் ஐவருக்கு பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மே தினத்தையொட்டி நேற்று யாழ். மத்திய கல்லூரியில் நடாத்தப்பெற்ற கண்காட்சிப் போட்டியில் பரிசுகள் பெற்றவர்களது பெயர்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதலாம் இடம் தமிழீழத்தில் தொழிலாளரின் எழுச்சிபற்றிய ஓவியத்திற்கு வழங்கப்பட்டது. இரண்டாம் இடம் எழுச்சி பற்றிய சேக் வேலைப்பாட்டிற்கு வழங்கப்பட்டது, இப் பரிசு 165/1, நல்லூர் வீதியைச் சேர்ந்த சவிதாவிற்கு வழங்கப்பட்டது

மூன்றாம் இடம் எழுச்சி பற்றிய மெழுகு வேலைப்பாட்டிற்கு வழங்கப்பட்டது. இப் பரிசு 18B கோவில் வீதியைச் சேர்ந்த அன்ரன் யோசப்பிற்கும், உலகத் தொழிலாளர் ஏந்துதல் பற்றிய ஓவியத்திற்கும் வழங்கப்பட்டது. இப் பரிசை டீ, பப்சி என்ற 126 மாமுன்காமம் வீதியைச் சேர்ந்தவர் பெற்றுக் கொண்டார். ஐந்தாம் இடம் வலிந்து இழுக்கும் நான்கு நபர்கள் பற்றிய ஓவியத்திற்கு வழங்கப்பட்டது. இதனை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பைச் சேர்ந்த தயாபரனும் பெற்றார்.

## சிறுவர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவும் பொருட்டும் சிறுவர்களின் உளவியல் நலத்துக்காகவும் பல பயிற்சிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

சென்ற ஆண்டு பெப்ரவரியிலும் இவர் யாழ்ப்பாணம் வந்ததும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோசடிகளில் இதுவும் ஒன்றாகும்.

ஆரையம்பதி உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள கிராமமொன்றில் 8 பேருக்கு தலா 4000 ரூபா அனுப்பி வைக்கப்பட்டது 8 பேரும் பூஸா முகாமிருந்து விடுதலை பெற்றவர்கள்.

ஆனால் வழங்கப்படவேண்டிய தொகை 2000 ரூபா ஆகும்.

உடனே உதவி அரச அதிபர் காசோலையில் ரொக்கம் தவறாக இடம்பெற்றிருக்கலாம் என கருதி மீள ஒப்படைத்தார்.

மேற்படி 8 பேருக்கும் தலா 2000 ரூபாய்க்கான புதிய காசோலைகள் அனுப்பிவைக்

## மணல் பாதைகளாக மாறி வருகின்ற வீதிகள்

(காத்தான்குடி)

காத்தான்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள பல முக்கிய வீதிகள் மணல் செறிந்து போக்குவரத்துச் செய்யமுடியாத அவல நிலையில் காணப்படுகின்றன.

வீதிகளின் ஓரமுள்ள வீடுகளிலும் தூசி படிந்து சுகாதாரக் கேடுகளை விளைவிப்பதாக பல குடியிருப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காத்தான்குடி பிரதேசசபை உதவி ஆணையாளர் இந்த

## எப். எம். அலைவரிசை ஒலிபரப்பிற்கு ஜேர்மன் உதவி

(கொழும்பு)

னர் செய்யப்பட்ட ஒப்பந்தப்

துச் செய்யமுடியாத அவல நிலையில் காணப்படுகின்றன.

குறிப்பாக தீன் வீதி, அமானுல்லா வீதி, கர்பலா வீதி ஆகியன மிகமோசமான நிலையையடைந்துள்ளன.

இவ் வீதிகள் வழியாக மோட்டார்வாகனங்கள் சென்றால், அதனால் கிளப்பப்படும் தூசு மண்டலம் அடங்க பல நிமிடங்கள் செல்கின்றன.

அதுவரை மூக்கைப் பிடித்துக் கொண்டு சைக்கிள் பயணிகளும், பாதசாரிகளும் காத்துக் கிடக்கின்றனர்.

காத்தான்குடி பிரதேசசபை உதவி ஆணையாளர் இந்த வீதிகளில் உள்ள மண்ணை அப்புறப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பலரும் தெரிவித்துள்ளனர்.

---

### பன்றி-

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாண நகரில் சேற்றிலும், குப்பைகளிலும் பன்றிகள் திரிவதை தினமும் காண முடிகிறது.

---

ரூட் நிறுவனம் நடவடிக்கை

# கருவேலம் மரநடுகை மூலம் விறகுத் தட்டுப்பாடு நீக்கம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாப்பாமோட்டை, ஆத்திமோட்டை, இலுப்பைக்கடவை ஆகிய பகுதிகளில் ரூட் நிறுவனம் மேற்கொண்ட முயற்சியால் சின்ன கருவேலம் மரங்கள் நன்கு வளர்ந்து பரவிக்கொண்டு வருகின்றன.

வரண்ட பிரதேசங்களில் இந்த மரவிதைகளை நாட்டியதால் எதிர் காலத்தில் விறகுத் தட்டுப்பாடு நீங்குவதுடன் இந்தப் பகுதியில் வரட்சியிருப்பதையும் காண முடியாதுள்ளது.

பிரயோசனமற்ற உலர் நிலங்களில் இதன் மூலம் பிரயோசனங்களைப் பெற்றுக் கொள்ளவே தமிழீழ ஆய்வு நிறுவனம் இந்தியாவிலிருந்து இந்த விதைகளை தருவித்து நாட்டியுள்ளது.

இதன் மூலம் நாயாற்று வெளி, ஆட்காட்சி வெளி போன்ற தமிழீழ வரண்ட வெளியான பகுதிகள் மரங்கள் உள்ள பகுதிகளாக மூன்று, நான்கு ஆண்டுகளில் மாறிவிடும்.

தரிசு நிலங்களாக உள்ள பகுதிகளில் இந்த மரங்களை உண்டாக்கி பயன் பெற ரூட் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

---

### இரணமடு.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு கூடுதலாக நீர் பாய்ச்ச முடியும்.

இக்குளக்கட்டும், வானும் (ஸ்பில்) காலத்திற்குக் காலம் உயர்த்தப்பட்டு வந்தது. குறிப்பிடத்தக்கது. இம் முறையும், இவ் வான் (ஸ்பில்) உயர்த்தப்படுவதன் மூலம் இவ்வளவு காலமும் தரிசாகக் கிடந்த நிலங்களுக்கும், மானாவாரிச் செய்கை மட்டும் செய்யப்பட்டு வந்த நிலங்களுக்கும் எதிர்காலத்தில் நீர்பாசனம் கிடைக்கவுள்ளது. (49)

---

### இன்றைய

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

இதிலிருந்து நாம் எதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. என்றால் கடந்த காலத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் எமது மாணவ சமுதாயத்தில் மன உணர்வுகளை எந்த அளவுக்கு பாதித்துள்ளது என்பதை உணரக்கூடியதாக உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் இக்கண்காட்சியில் மே தினத்திலன்று நடைபெற்ற ஊர்த்திகளின்போது முதலிடம் பெற்ற ஊர்ந்திக்கு பரிசில் வழங்கப்பட்டதுடன் ஓவியப்போட்டியில் முதலிடம் பெற்ற ஓவியத்திற்குப் பரிசில்கள் வழங்கப்பட்டது. (லோ)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டுக் மே மாதம் -06ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பித்து வருகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

---

### யூ. என். பி.

# உள்ளூராட்சி வேட்பாளர்கள் மினித்தேர்தல் மூலம் தெரிவு!

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களில் போட்டியிட தெரிவாகும் ஐக்கிய தேசியக்கட்சிவேட்பாளர்கள் இனிமேல் மினித்தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி வேட்பாளர்களை இவ்வாறு மினித்தேர்தல் மூலமாகவே குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் தமது வேட்பாளர்களைத் தெரிவு செய்வது போல இங்கும் தெரிவு செய்யப்படவுள்ளதாக ஐ. தே. க. பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்

---

### வறுமையை

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தூதுக்குழு அமைச்சருடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியபோது அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்'

கிராமிய அபிவிருத்திக்கு ஒல்லாந்து அரசாங்கம் அளித்துவரும் உதவிகளுக்கும் அமைச்சர் நன்றி கூறினார்

---

தான் முதலில் பணம் வழங்க வேண்டும் இவ்வாறு அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (49)

---

### நூற்றைம்பது

1 ஆம் பக்கத்தொடர்ச்சி

சிறையாக மாற்றப்பட்டுள்ளது.

இதேபோல குற்றச் செயல்களுக்காக சிறையில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு வருடத்துக்கு மூன்று வாரங்கள் என்ற கணக்கில் தண்டனை குறைக்கப்பட்டுள்ளது.

போதைவஸ்துதொடர்பான வழக்கில் சிறைத்தண்டனை பெற்றவர்களுக்கு இந்த மன்னிப்பு வழங்கப்படமாட்டாது என நீதியமைச்சு உதவிச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

---

# சாரதி அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கலாம்

புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் இவ்வாண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும் என மோட்டார் வாகனப்பதிவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இவ் விண்ணப்பங்கள் மே மாதம் 31 ஆம் திகதி வரையுமே ஏற்றுக் கொள்ளப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டது.

பலர் இதற்கு விண்ணப்பிக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்ட புகார்களையடுத்து இதன் முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

---

# பொலிஸ் அதிகாரிக்கு எதிராக மனைவி முறைப்பாடு

(நீர்கொழும்பு)

வடமேற்கு மாகணத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தரின் மனைவி நீர்கொழும்புப் பொலிஸ் நிலையத்தில் தன் கணவனுக்கெதிராக எழுத்து மூலமான முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார். தன்னையும், பெற்றோரையும், தன்னுடைய சகோதரர்களையும் கொலை செய்யப்போவதாகக் கணவன் பயமுறுத்துவதாக முறைப்பாட்டில் கூறப்பட்டிருக்கிறது.

தொடர்ச்சியாகத் தன் கணவர் தன்னைத் துன்புறுத்துவதாக அந்த முறைப்பாட்டில் சொல்லப்பட்டிருப்பதோடு தனக்கும், தன்னுடைய பெற்றோர், சகோதரர்களுக்கு தனது கணவனான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியினால் தீங்கிழைக்கப்படாது தன்னைக் காப்பாற்றுமாறு முறைப்பாட்டில் கோரப்பட்டுள்ளது.

முறைப்பாடு விசாரிக்கப்படுவதாக நீர்கொழும்பு பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன,

---

(கொழும்பு)

நாடு முழுவதும் எப் எம். அலை வரிசையில் வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப மேற்கு ஜேர்மன் அரசு உதவி வழங்கியுள்ளது.

பத்து வருடங்களுக்கு முன்னர் செய்யப்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு ஜேர்மன் அரசு இதற்குரிய உபகரணங்களையும், கருவிகளையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கியுள்ளது.

---

# நலன்புரிச் சங்க விற்பனை 'நிலையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகள் குறைந்த விலையில் தமக்குத் தேவையான அத்திய அவசியப் பொருட்களை வாங்குவதற்கு ஏற்றதாக நோயாளர் நலன் புரி சங்கம் ஓர் விற்பனை நிலையத்தை ஸ்தாபித்துள்ளது.

நோயாளர்கள் எந்நேரத்திலும் தமது பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்றவாறு இருபத்தி நான்கு மணி நேரமும் இந்நிலையம் சேவையில் ஈடுபட்டிருக்கும் என சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். (லோ)

---

### தேனிசை நிகழ்ச்சி

(கல்முனை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேனிசைச் செல்லப்பாவின் தேனிசை முதலாவது இசை நிகழ்ச்சி நேற்றுக் கல்முனையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை மட்டக்களப்பு பிராத்தியத் தளபதி கருணா விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரதித் தலைவர் கரிகாலன், அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ராஸ்ரோ ஆகியோர் உரை நிகழ்த்தின்ர். இவ்விழாவில் பலஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள்.

---

### மாணவர்களும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சித்திரை மாதத்திலிருந்து இந்த ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட இருப்பதாகஅண்மையில்நடைபெற்றபரிபாலன சபைக் கூட்டத்தில் தீர்மானமொடுக்கப்பட்டது. (15)

---

### ஹெலிக்கப்டரை . , .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நொருங்கியிருக்கலாம் எனவும் தெரிகின்றது. இக்காணாமல் போன ஹெலிகப்டரைத் தேட உதவுமாறு விடுதலைப் புலிகளை மட்டக்களப்பு மாவட்ட விமானப் படைத் தளபதி கருணரெத்தினா கோரியுள்ளார்,

---

2000 ரூபாய்க்கான புதிய காசோலைகள் அனுப்பிவைக்கப்பட்டன.

ஆனால் தலா 4000 ரூபா பெறுமதி காசோலைகள் ரத்து செய்யப்படாமல் ரொக்கமாக்கப்பட்டுள்ளது.

மேற்படி மோசடி உள்ளக கணக்காய்வின்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (37)

---

### மின் தூண்கள் வீதியின் நடுவில்

(சுதுமலை)

திருநெல்வேலி கொக்குவில் நெடுஞ்சாலையில் அமைந்து இருக்கும் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்பாக உள்ள பெருந்தெரு அகலமாக விஸ்தரிக்கப்பட்டு தார் ஊற்றப்பட்டுள்ளது.

ஆனால் ஏற்கனவே இருந்த மின்சார தூண்கள் இடை நடுவில் அதே இடத்திலையே தொடர்ந்தும் இருந்து கொண்டே இருக்கின்றன



நேற்று மத்திய கல்லூரியில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் முதலாம் பரிசுபெற்ற ஓவியம்